திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
அக்டோபர் 2020 விலை ரூ.5/-

16-10-2020
வெள்ளிக்கிழமை
இரவு :
பெரிய சேஷ வாகனம்



## திருமலையப்ப ஸ்வாமி
## நவராத்திரி பிரம்மோத்ஸவம்
## 2020 அக்டோபர் 16 முதல் 24 வரை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவத்தின் போது ஆலயத்திற்குள் நடைபெற்ற வெவ்வேறு வாகன சேவைகளின் திருக்காட்சிகள்





துவஜாரோஹணம், பெரிய சேஷ வாகன சேவையில் பங்கு கொண்ட தி.தி.தே. உயர் அதிகாரிகள்




ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து திருமலை வந்தடைந்த ஆண்டாள் மாலை



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள் ஸ்வாமி கருட வாகன சேவையில் பங்கு கொண்ட போது



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள் அரசு சார்பில் ஸ்வாமிக்கு பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்தபோது



திருமலையில் நடைபெற்ற சுந்தரகாண்ட பாராயணத்தில் மாண்புமிகு ஆந்திர, கர்நாடக மாநில முதல்வர்கள் முறையே திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள், திரு.பி.எஸ். எடியூரப்பா அவர்கள் பங்குகொண்டபோது



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்களுக்கு தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் ஸ்வாமி பிரசாதத்தை வழங்கியபோது



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள், மாண்புமிகு கர்நாடக மாநில முதல்வர் திரு.பி.எஸ். எடியூரப்பா அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கியபோது

*பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேசோ*
*தே$_3$வத$_3$த்தம் த$_4$நஞ்ஜய: |*
*பௌண்ட்$_3$ரம் த$_3$த்$_4$மௌ மஹாசங்க$_2$ம்*
*பீ$_4$மகர்மா வ்ருகோத$_3$ர: ||*

ஸ்ரீகிருஷ்ண பகவான் பாஞ்சஜன்யம் என்ற பெயர் கொண்ட சங்கை முழக்கினார். அர்ஜுனன் தேவதத்தம் என்ற பெயர் கொண்ட சங்கை முழக்கினார். பயங்கரச் செயல்புரியும் பீமசேனன் பௌண்டிரம் என்ற பெயருள்ள பெரிய சங்கை முழக்கினார்

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–15*





*பெரும் திருவுருவும் சயமங்கை*
*யுமாகி என்பேதை நெஞ்சில்*
*இருந்தருளும் செஞ் சொல்*
*வஞ்சியைப் போற்றில்*
*எல்லாவுயிர்க்கும்*
*பொருந்திய ஞானம் தரும் இன்ப*
*வேதப் பொருளும் தரும்*
*திருந்திய செல்வம் தரும் அழியாப்*
*பெருஞ் சீர் தருமே.*

இக்கலைமகளைத் துதித்தால் நிலையான ஞானத்தையும், பேரின்பத்தையும் பற்றக்கூடும். வேதப் பொருளையும் நல்ல செல்வத்தையும் அழியாதப் புகழையும் தந்தருள்வாள்.

*- சரஸ்வதி அந்தாதி-30*

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வருடாந்திர பிரம்மோத்ஸவம்

**11-11-2020 முதல் 19-11-2020 வரை**

**11-11-2020**
புதன் கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**12-11-2020**
வியாழக்கிழமை
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**13-11-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**14-11-2020**
சனிக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**15-11-2020**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : பல்லக்கு உற்சவம்
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**16-11-2020**
திங்கட்கிழமை
பகல் : சர்வபூபால வாகனம்
இரவு : கருட வாகனம்

**17-11-2020**
செவ்வாய்க்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**18-11-2020**
புதன் கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**19-11-2020**
வியாழக்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்-பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்



**தாயார் தரிசனம்**
**ஆனந்தம்..**
**ஆரோக்யம்...**
**ஐச்வர்யம்....**





மலர் 51 | இதழ் 05


## உள்ளுறை

பக்கம்


**மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...** 7
- ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்.

**ஆனந்த நிலையமாம் திருமலை திருக்கோயில்** 11
- திருமதி பா. காயத்ரி, கேரளா.

**முதலாழ்வார்கள் காட்டும் திருமலையின் இயற்கை எழில்** 16
திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், அம்பத்தூர்.

**மலையப்பனும் ம்ருதஸஞ்சீவநீயும்** 19
- டாக்டர் ஸ்ரீ.உ.வே.அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை.

**மாமுனிகளும் அஷ்ட திக்கஜங்களும்** 22
- டாக்டர் கலியன் சம்பத்து, சென்னை.

**தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** 25
- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.

**நவராத்திரி திருவிழா** 51
- முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை.

**108 திவ்வியதேச வைபவம் – திருக்கோளூர்** 54
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**சுமந்து மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு...** 57
- முனைவர் எம்.எஸ். வேங்கடாசாரி, காட்டுமன்னார்கோயில்.

**அன்னமய்யா வாழ்க்கை வரலாறு** 59
- திருமதி ராதாராமநாதன், திருப்பதி.

**அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் :**
**பகவானின் பெயர் வைப்பதால் என்ன புண்ணியம்?** 61
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

**ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–பிரகலாதனின் திவ்விய மகிமைகள்** 63
- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.

**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 66
- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

**பகவத் கீதை–இளைய சமுதாயம் – நரகத்திற்கான மூன்று நுழைவு வாயில்கள்** 69
- திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா.

**ஆயுர்வேதம்–சீந்தில் கொடி** 71
- முனைவர் ப. தனஞ்செழியன், சென்னை.

**இராசிபலன்– அக்டோபர் 2020** 73
- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **பெரிய சேஷ வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி (உற்சவர், திருமலை).**

பின்னட்டை : **ஹம்ச வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி (உற்சவர், திருமலை).**


சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
**பேராசிரியர்** K. **ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

# நவராத்திரி பிரம்மோத்ஸவம்

இப்பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு அதாவது படைப்பிற்கு மூலகாரணமாய் அமைந்திருப்பது நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு சக்தியே ஆகும். இதனை அறிவியலில் "இயக்கும் ஆற்றல்" என்றும், ஆன்மீகத்தில் "தெய்வீக சக்தி" என்றும் கூறப்படுகிறது. அந்த தெய்வீக சக்திக்கு பெண் வடிவம் தந்து ஆன்றோர் வணங்கினர். இச்சக்தியையே சைவத்தினர் ஆதி சக்தி என்றும், வைணவத்தினர் பெரிய பிராட்டி என்றும் போற்றி வணங்குகின்றனர்.

ஆண்களை விட பெண்களுக்கே பரந்த மனப்பான்மையும், தயை குணமும் இயற்கையாக அமைந்துள்ளது. எனவேதான் நாயன்மார்கள் "சக்தியே சிவம்" என்றும், ஆழ்வார்கள் "திருவே திருமால்" என்றும் போற்றி துதித்தனர். அந்த சக்தியே, "இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி எனவும், பஞ்ச மாதாக்களாகவும், சப்த யோகினிகளாகவும், அஷ்ட மூர்த்திகளாகவும், தசமகா வித்தைகளாகவும்" பலவகைகளில் விரிகிறாள். "பிரணவப்பொருளும் அவளே, வேதச் சாகைகளின் பொருளாகவும், உபநிடத பொருளாகவும் இருப்பவள் சக்தியே" என்கிறது ராஜராஜேஸ்வரி அஸ்டகம். அபிராமி அந்தாதியிலும் *''ஒன்றாய் அரும்பி பலவாய் விரித்து இவ்வுலகெங்குமாய் நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள்''* (56) என்று கூறப்பட்டுள்ளது.

வைணவ சாம்பிரதாயமும் "திரு"வோடு இணைந்த சாம்பிரதாயமாகும். பெருமாளுக்கும் திருமால் என்றே பெயர். ''திரு'' என்பது சிருஸ்டியை குறிக்கும். ஆழ்வார்களும் தம் பாசுரங்களில் பிராட்டியை முதன்மைபடுத்தியே பாசுரமிட்டுள்ளனர். குறிப்பாக பேயாழ்வார் *''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்''* (மூன்.திரு–1) என்ற பாசுரத்தில் முதலில் பிராட்டியை தரிசித்ததாகவே பாசுரமிடுகிறார்.

இதன் மூலம் பெண்மையின்றி இப்பிரபஞ்சத்தில் எதுவும் அமையாது எனும் உண்மையை உணரமுடிகின்றது. இவ்வாறு மிக உயர்ந்ததான பெண்மையை போற்றும் விதமாக பெண்மைக்காகவே தனிவிழாவாக சிறப்புடன் ஒன்பது நாட்களும் நாடெங்கும் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. நவராத்திரி பண்டிகையின் முக்கிய நோக்கமே அனைத்தும் இறை சக்தியின் வடிவமே என்பதை உணர்த்துவதற்காகத்தான்.

கலியுக வைகுந்தமான திருமலையில் கொலுவீற்றிருக்கும் திருவேங்கடமுடையானுக்கும் நவராத்திரியை முன்னிட்டு பிரம்மோத்ஸவம் ஒன்பது நாட்கள் வைபவமாக நடைபெறும். நவராத்திரியின் ஒன்பது நாட்களும் திருமலையப்ப ஸ்வாமி தினமும் வெவ்வேறு அவதார கோலங்களில், வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருள்வார். "நித்ய கல்யாணம் பச்சை தோரணம்" என்றாலே நினைவுக்கு வருவது திருமலை திருத்தலம் தான். இவ்வருடம் சாந்திரமானப்படி அதிகமாதம் வருவதினால் வருடாந்திர பிரம்மோத்ஸவமும், நவராத்திரி பிரம்மோத்ஸவமும் தனித்தனியாக நடைபெறுகிறது. இந்த நவராத்திரி பிரம்மோத்ஸவத்திலும் திருமலையப்ப ஸ்வாமி வெவ்வேறு அலங்காரங்களில் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு தரிசனம் அளிக்கின்றார். பக்தர்களும் அமைதியாக மனதில் "கோவிந்த" நாமத்தை உச்சரித்தவண்ணம் ஸ்வாமியை வணங்கி தரிசிக்கலாம்.

கேட்கும் வரங்களை அள்ளித்தரும் ஸ்ரீநிவாசன் கற்பகத்தருவாவார். மனோரத சித்தி அளிக்கும் இறைவனாவார். வணங்குபவர்களுக்கு ஆனந்த வடிவானவர். இப்பேற்பட்ட ஸ்வாமியின் திருமார்பில் "வியூக லக்ஷ்மி" எனும் பெயரில் மகாலக்ஷ்மி வீற்றிருக்கின்றாள். ஆதலால் தான் அவர் "ஸ்ரீ"நிவாசனானார். திருவேங்கடமுடையானுக்கு எந்த அர்ச்சனை நடைபெற்றாலும் அவர் திருமார்பில் வீற்றிருக்கும் வியூக லக்ஷ்மிக்கும் அர்ச்சனை நடைபெறும். இது திருமலையில் உள்ள சாம்பிரதாயமாகும். வேங்கடாசல க்ஷேத்திரத்தில் நடைபெறுகின்ற இந்த நவராத்திரி பிரம்மோத்ஸவத்தை தரிசித்தாலே போதும் ஸ்வாமியையும், தாயாரையும் ஒரு சேர தரிசித்த பலன் கிட்டும். நித்ய கல்யாண சக்ரவர்த்தியான அந்த ஸப்தகிரிவாசனை தரிசித்து அந்த ஸ்வாமியின் பரிபூரண அருளுக்கு பாத்திரமாவோமாக.

# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...

**ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ**
**ஸ்ரீ.உ.வே.அ.கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி,**
**திருவரங்கம்,**
**98842 89887.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

கி.பி. 1001–இல் இரண்டாம் பராந்தக சோழனின் மனைவியாகிய பராந்தகதேவி அம்மன் திருவேங்கட முடையானுக்குப் பொன்னாற் செய்யப்பட்டுப் பல கற்கள் இழைத்த பட்டம் ஒன்றை அணிவித்தார். இராமாநுசர், யாதவராயன் துணை கொண்டு பல அணிகலன்களை செய்து அணிவித்தார். சாமவை என்னும் பல்லவர் பேர்க்கடையார் மனைவி, வைரக் கலன்கள் பல அமைத்துச் சூட்டினார். அவர்களுக்குப் பின் கிருஷ்ண தேவராயன் ஏழு முறைகள் வேங்கட வள்ளலை வணங்கினான். ஒவ்வொரு முறையும் பொன் அணிகலன்களும், வைரமுடியும், தோரண வாயிலும், பொற்கிண்ணங்களுமாகப் பெருமாளுக்களித்து பல ஊர்களையும் நன்கொடையாக அளித்துப் பேறுபெற்று திருவேங்கடமுடையானது செல்வம் ஓங்கி இருக்குமாறு செய்தான். அவன் மனைவியர் செய்தளித்த திருவாபரணங்களுக்கும் கணக்கில்லை. ஏனைய அரசர்களும் பல அணிகளை வழங்கி இருக்கின்றனர். கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த மட்லகுமார அநந்தராயன் என்னும் அரசன் பொற்குதிரை, பொன் யானை, திருத்தேர், பத்மபீடம், ரத்தினமுடி, நைவேத்தியத்துக்குரிய பொன் வெள்ளி பாத்திரங்கள் பலவற்றை அளித்தான். திருமலை அடிவாரத்திலுள்ள இரண்டாவது கோபுரமான (புதிய கோபுரமும்) காலி கோபுரம் இல்லாதிருந்தபோது அவ்விடத்திற்கு பெரிய ஏற்றத் தலை என்று பெயர் வழங்கி வந்ததாகவும், அங்கு புரட்டாசித் திருநாள் சேவிக்கவரும் யாத்ரிகர்களுக்குத் தண்ணீர் பந்தல்கள் கி.பி. 1488–ல் சாளுவ நரசிம்மனால் அமைக்கப்பட்டனவாகவும் தெரிகின்றன (G.T. 142).

## எம்பெருமானாரின் தூண்டுதலால் மன்னர்கள் புரிந்த தொண்டுகள்:

திருமலையிலும் திருப்பதியிலும் இராமாநுசர் செய்தருளிய சீர்த்திருத்தங்களும், புதிய வகையில் கோயில் திருப்பணிகளைச் செய்வதற்கும் பெருந் துணையாய் இருந்தவர் அரசன் கட்டியம் யாதவராயன் என்பான். இவன், சோழ மன்னனுக்கு அடங்கிய சிற்றரசன். நாராயணவனத்தை தலைநகராகக் கொண்டு அப் பகுதியை ஆண்டவன். இராமாநுசரது பெருமைகளை அறிந்து அவருக்கு சீடனாயினன். இவன் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பது கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றது.

இராமாநுசர் திருவேங்கடமுடையானுக்குத் திருவாழி திருச்சங்குகளைச் சாத்தி அருளியபோது திருவேங்கட நாட்டை ஆண்டவன் யாதவ ராயன் எனப்ப





டுகிறான். அவன் கட்டியம் யாதவ ராயனுக்கு முன் இருந்தனாதல் வேண்டும் என்பது சிலர் கருத்து. சிலர் அவனே கட்டியம் யாதவராயன் என்பதுண்டு

இராமாநுசர், கோவிந்தராசரைத் திருப்பதியில் திருபிரதிஷ்டை செய்தபின், கட்டியம் யாதவராயன் அவர் சந்நதியின் முன் ஒரு மண்டபம் கட்டினான். அதன்பெயர் திருச்சித்திர கூட மணிமண்டபம் என்றும், தில்லைக்கு வாய்த்தான் மண்டபம் என்றும் குறிப்பிடப்படுகிறது. அவன் வேறு பல மண்டபங்களையும், திருப்பதியில் இராமாநுசர் கோயிலையும், திருமாமணி மண்டபத்தையும் (கல்யாண மண்டபம்), கோபுரங்களையும் கட்டுவித்தான். இவன் இராமாநுசர் காலத்திற்குப் பின்னும் வாழ்ந்திருந்தவன்.

மலையப்பனுக்கு திருப்பணி செய்தவர்களுள் மிக அதிகமான திருப்பணிகளைச் செய்தவர்கள் விஜயநகர மன்னர்கள் ஆவர்.

**திருமலையில் காணக்கிடைக்கும் விஜய நகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுகள்:**

திருமலை திருப்பதி கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள கல்வெட்டுகள் ஜுன் 1922ஆம் ஆண்டு தொடங்கி படியெடுக்கப்பட்டுள்ளன. இந்தப்பணி 6 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றன. மொத்தம் 1150 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு பல்வேறு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. முதற் தொகுப்பு 236 கல்வெட்டுகளைக் கொண்டது. அவை: பல்லவ, சோழ, பாண்டிய, விஜய நகர, சங்கம குல மன்னர்கள் காலத்தவையாகும். அதற்கடுத்தபடியாக 169 கல்வெட்டுகளைக் கொண்ட விஜயநகர சாளுவ நரசிம்மன் காலத்தவை. 3ஆம் தொகுப்பாக கிருஷ்ணதேவராயர் காலத்து 229 கல்வெட்டுகள், அதற்கு அடுத்த 4ஆம் தொகுப்பாக அச்சுதராயர் காலத்து 251 கல்வெட்டுகளும், ஐந்தாம் தொகுப்பாக 147 கல்வெட்டுகள் சதாசிவராயர் காலத்தைச் சார்ந்தவை. கிருஷ்ணதேவராயர், அச்சுத தேவராயர், சதாசிவராயர் ஆகியோர் விஜயநகர துளுவ வம்சத்தைச் சார்ந்தவர்கள். இறுதித் தொகுப்பாக ஆரவீடு வம்சத்து 135 கல்வெட்டுகள் வெளிவந்துள்ளன.

திருப்புல்லாணி தாசர் என்பாரொரு அன்பர், திருவேங்கட நாட்டை அப்போது ஆண்டு கொண்டிருந்த வீரநரசிங்க யாதவராயனது கட்டளை பெற்றுத் திருமலை நடுக்கோயிலை கி.பி. 1244–ல் புதுக்கினான். நடுக்கோயில் கோயிலாழ்வார் எனப்படும். அவ்வாறு புதுக்கிய போது சில கல்வெட்டுக்கள் சிதைந்து போயின. சிலவற்றைப் படி எடுத்து நடுக்கோயில் மீண்டும் வெட்டுவித்தனர். அங்ஙனம் சிதைந்த கல்வெட்டுக்களுள் இராமாநுசர் வரலாறுகளும், பிற இன்றியமையாத பழைய வரலாறுகளும் இருந்திருத்தல் கூடும். அவற்றுள் சில சிதைந்து காணப்படுகின்றன. அவற்றால் உண்மை உணரக் கூட வில்லை. அவை சிதையாது கிடைத்திருப்பின் பல உண்மைகள் தெரிந்திருக்கும்.

அக்கோயிலை நன்கு போற்றி வந்த வீரசிங்க யாதவராயன் கி.பி.1245 – இல் துலாபாரம் புக்குத் தானம் செய்த பொன்னைக் கொண்டு அக்கோயிலின் விமானத்திற்கு முதல் முதலாகப் பொன்பூச்சு பூசப்பட்டது. அதே காலத்தில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் அதற்குப் பொற்கலசம் அமைத்து வைத்தான். சாளுவமங்கி தேவன் 1359 – இல் விமானத்துக்குப் பொன் கலசம் அமைத்தான் (T.T. 224).



கிருஷ்ண தேவராயன் முப்பதாயிரம் வராகன் கொடுத்து விமானத்திற்குப் பொன் பூசினான்.

இராமாநுசர் காலத்திற்கு முன் இருந்த விமானம் சிதிலமாய் இருந்திருத்தல் வேண்டும். அவ்விமானம் எந்தத் தேவதையின் வடிவமும் அமைக்கப்படாமல் இருந்தமையால், அவர் அதன் நாற்புறங்களிலும் திருமால் கோயிலுக்குரிய விமான தேவதைகளை அவர் அமைத்து வைப்பாராயினர்.

திருமலைக் கோயிலில் இருந்த திருமகாமணி மண்டபத்தில் கல்காரம், குறடு முதலாக மேற்கூரை விமானம் ஈறாக உள்ளவற்றை, கி.பி. 1417 – ல் சந்திரகிரியில் வாழ்ந்திருந்த மல்லண்ணா என்னும் மாதவதாசர் என்பவர் தம் திருப்பணியாகச் செய்து முடித்தார் (Ins.Vol.I 196). சாளுவ நரசிங்கராயன் காலத்தில் கி.பி. 1468 – இல் திருமலையில் ஒரு கோபுரமும், மண்டபமும், திருக்கோனேரி தீர்த்தத்தில் நீராழி மண்டபமும் (வசந்த மண்டபம்) அவன் கட்டளைப்படி திருமலைச் சபையாரால் கட்டப்பட்டன. இவன் பல சத்திரங்களையும் கட்டுவித்தான். அவற்றுள் அத்திகிரிஜயன் சத்திரம் என்பது ஒன்று. இவற்றைத் தவிர, அழகப்பிரானார் திருப்பூ மண்டபம், சேதிராயன் மண்டபம் முதலாகப் பல மண்டபங்களும் இருந்தன.



ஆரவீட்டு மரபைச் சேர்ந்த திருமலய்ய தேவ மகாராஜா என்னும் திருமலைராயன், திருமலைச் சம்பங்கிச் சுற்றுக்குள் (உள்பிரகாரம்) துவஜஸ்தம்பத்திற்குத் தெற்காக கி.பி. 1561–இல் ஒரு ஊஞ்சல் மண்டபத்தைக் கட்டி, அதில் உற்சவ மூர்த்தியை வசந்தத் திருநாள், திருக்கொடித் திருநாள் ஆகிய காலங்களில் எழுந்தருளப்பண்ணி அமுது செய்விப்பதற்குப் பல தானங்களையும் ஏற்படுத்தினான் (T.T.633). இப்போதும் அது திருமலைராயன் மண்டபம் எனப்படுகின்றது.

திருமலை மேல் உள்ள கோனேரி தீர்த்தத்திற்கு மேற்காக அச்சுத தேவராயன் தன் பெயரால் அச்சுத கோனேரி என்னும் தீர்த்தத்தை உண்டாக்கி அதன் கரையின் மேல் வசந்த மண்டபம் ஒன்றையும் கட்டுவித்து, மலைக்குனிய நின்ற பெருமாளை உற்சவ காலங்களில் எழுந்தருளப் பண்ணித்திருவமுது கொண்டருளுமாறு ஏற்பாடுகள் செய்து வைத்தான்.

கந்தாடை இராமானுசமுனி சாளுவ நரசிம்மனுடைய மூத்த சகோதரரானபடியாலே அவர் காலத்தில் திருமலையில் எழுந்தருளியிருந்த (பெரியஜீயர் மடத்தை அலங்கரித்திருந்த) அழகிய மணவாளஜீயரை ஆச்ரயித்து இருந்தார். இதிலிருந்து திருமலையில் பெரியஜீயர் மடத்தில் பல்வேறு கால கட்டங்களில் அழகியமணவாள ஜீயர் என்ற பட்டப்பெயருடன் ஜீயர்கள் எழுந்தருளியிருந்தமை அறியப்படுகிறது.

கந்தாடை இராமானுசமுனி ஏகாங்கியாக ஆச்ரம ஸ்வீகாரம் கொள்வதற்கு முன்பு அழகியமணவாள ஜீயரிடம் திருவிலைச்சினை பெற்றிருந்தார் என்பதும் பிற்காலத்தில் மணவாள மாமுனிகளிடம் கொண்ட ஈடுபாடு காரணமாக அவருடைய பிரிய சிஷ்யரான கோயில் கந்தாடை அண்ணனை ஆச்ரயித்து அதனால் அயோத்யை ராமாநுஜ அய்யங்கார் என்ற தமது பூர்வாச்ரம திருநாமத்தைத் துறந்து கந்தாடை இராமாநுச முனி என்ற திருநாமத்தைப் பெற்றார்.

ஹரிஹரர், புக்கர் ஆகிய சகோதரர்களால் தோற்றுவிக்கப்பட்ட சங்கம வம்சாவளியைச் சார்ந்த மன்னர்களான முதலாம் புக்கர், இரண்டாம் ஹரிஹரன், இரண்டாம் தேவராயன், மல்லிகார்ஜுனன் ஆகியோருக்குப் பிறகு சாளுவ நரசிம்மனால், சாளுவ வம்சாவளி தோற்றுவிக்கப்பட்டது.

அவனுக்குப் பிறகு இம்மடி நரசிம்ம சாளுவகுல மன்னனாகத் திகழ்ந்தார். கி.பி.1445 தொடங்கி 1504 ஈறாக சாளுவ மன்னர்களுடைய ஆட்சி நடைபெற்றது. இந்த கால கட்டத்தில் கி.பி.1465 தொடங்கி 1495 ஈறான ஆண்டுகளில் கந்தாடை இராமானுசமுனி பற்றிய 22 கல்வெட்டுகள் இந்தத் தொகுப்பில் காணக்கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகளிலிருந்து, இம்மடி நரசிம்ம சாளுவகுல அரசனின் ஆணையின் பேரில் கந்தாடை



இராமானுஜமுனி ஆற்றிய தொண்டுகள் பற்றிய கீழ்க் கண்ட செய்திகள் பெறப்படுகின்றன.

♦ அழகியமணவாளஜீயர் ஸ்வாமி சிஷ்யர் இராமாநு ஜய்யன் எனப்படும் அயோத்யை இராமாநுஜ ஐயங்கார்.

♦ இவர் கோயில் (திருவரங்கம்), திருமலை (திரு வேங்கடம்), பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்) ஆகிய இடங்களில் இராமாநுச கூடங்களை நிறுவினார். (திவ்ய தேசங்களில் இராமாநுச கூடங்கள் கந்தாடை இராமா னுசமுனி காலத்தில்தான் நிறுவப்பெற்றன.)

♦ திருமலையில் தம்முடைய ஆசார்யரான அழகிய மணவாள ஜீயருடைய நினைவாக திருவாய் மொழி சிறப்பு என்னும் சந்தியை திருவாய்மொழி தொடக்கத் தின் போதும், சாற்று முறையின்போதும் ஏற்படுத்தி வைத்தார்.

♦ திருநந்தவனத்தை திருமலையில் ஏற்படுத்தினார்.

♦ அவருடைய சிஷ்யர்களான சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர் கள் உபயமாக, அழகப்பிரானார் திருமஞ்சன காலத் திலே சாத்துப்படி, பிளவமுது, இலையமுது ஆகிய வற்றை அமுது செய்தருளப் பண்ணுவித்து அமுது செய்தருளுகிற பிரசாதத்திலே ஒரு பங்கினை இராமா நுச கூடத்திற்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளை செய்தார்.

♦ தரிசாய் கிடந்த நிலங்களை செழுமையாக்கி அதிலே தானியங்களைவிளைவித்து, அதன்மூலம் கிடைக்கும் வருவாயினை ஸ்ரீபண்டாரத்தில் சேர்ப்பித்து மலைக் கினியப் பெருமாளுக்கு விசேஷ அமுது படிகளை அமுதுசெய்வித்தப் பிறகு அந்த பிரசாதத்தை முழங்கால் முறிப்பானில் கந்தாடை இராமானுச முனி உபயமாக ஏற் படுத்தப்பட்ட தண்ணீர்ப் பந்தலுக்கு, தண்ணீர் வார்க்கிற ஆளுக்கும், திருநந்தவனத்திலே செங்கழுநீர்ப் பூவினை பயிர் செய்விக்கின்ற ஸ்ரீவைஷ்ணவர்க்கும் கொடுப்ப தற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

♦ திருச்சுகனூரில் திருவிடையாட்ட பூமியில் புதிதாகப் பாசனக் கால்வாய்களை வெட்டி அமோகமான விளைச் சலை ஏற்படுத்தி அந்த வருவாயை ஸ்ரீபண்டாரத்திலே சேர்ப்பித்து திருவேங்கடமுடையானுக்கு நரசிங்க ராஜ உடையார் சந்நதியாக விசேஷ அமுதுபடிகள் சமர்ப் பித்தார்.

♦ மாசியில் குலசேகராழ்வார் அவதாரத் திருநக்ஷத் திரமாகிய புனர்பூச நக்ஷத்திரத்தில் திருப்போனகம் சமர்ப்பிப்பதற்கும், சாற்றுமுறை தினத்தன்று விசேஷ அமுதுபடிகள் சமர்ப்பிப்பதற்கும், இதேபோன்று திருக் கார்த்திகையன்று திருமங்கையாழ்வாருக்கும், திருவிசா கத்தன்று நம்மாழ்வாருக்கும் விசேஷத் தளிகைகள் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வித்தார்.

♦ அழகிய மணவாளஜீயர் நீலவண்டு பதக்கம் ஒன்றினை சமர்ப்பித்துள்ளார்.

♦ ஜகதாசார்ய சிம்மாசனாதிபதி ப்ரதிவாதி பயங்கரம் காரணை அனந்தாசார்யார் எனும் கல்விமான் ஒரு மகர கண்டிகையை 20ஆம் நூற்றாண்டில் சமர்ப்பித்துள்ளார்

**மேலும் வளரும்...**





# ஆனந்த நிலையமாம் திருமலை திருக்கோயில்

ஆங்கில மூலம் : திருமதி ஜெ.சி. ஞானபிரசுனா

தமிழ் வடிவம் : திருமதி பா.காயத்ரி, 9744657115

### விமான பிரதக்ஷிணம் :

வெள்ளி வாயிலை கடந்தவுடன் ஆனந்த நிலைய விமானத்தைச் சுற்றியுள்ள பிரதஷிண மார்க்கமாகும்.

### ஸ்ரீரங்கநாத ஸ்வாமி :

வெள்ளி வாயிலுக்கு எதிரே சேஷ சயனனான ஸ்ரீரங்கநாத ஸ்வாமி அவருக்கு அடுத்ததாக ஸ்ரீவரத ராஜ ஸ்வாமி மற்றும் திருவேங்கடமுடையானின் மூர்த்திகளைக் காணலாம்.

### ஸ்ரீவரத ராஜ ஸ்வாமி :

வெள்ளி நுழைவு வாயிலிலிருந்து இடப்புறம், உட்கோபுரத்திலிருந்து தெற்கு நோக்கி 7அடி தூரமும், பிரகார சுவரிலிருந்து கிழக்கு நோக்கி 2அடி தூரத்தில் ஸ்ரீவரதராஜ ஸ்வாமிக்கு ஒரு சிறிய சன்னதி அமைந்துள்ளது.

### கண்டா (மணி) மண்டபம் :


மஹாமணி மண்டபம் என்றழைக்கப்படும் இரு பெரிய மணிகளுடைய (கண்டா) இம்மண்டபம் தங்க வாயில் முன்னே அமைந்துள்ளது. இம்மணிகள் திருவேங்கடமுடையானுக்கு நைவேத்தியம் சமர்ப்பிக்கப்படும் போது ஒலிக்கப்படும். மேலும், இங்கு தான் சுப்ரபாதம், உகாதி, ஆனிவர ஆஸ்தானம் முதலிய விழாக்களும் நடைபெறும்.

### கருட மண்டபம் :

தங்க வாயிலின் எதிரில் அமைந்துள்ள இந்த மண்டபத்தில் ஐந்தடி உயரமுள்ள கருடாழ்வார் திருவேங்கடமுடையானை வணங்கி, ஸ்வாமியின் ஆணைக்காக காத்திருப்பதை போன்று காட்சியளிப்பதைக் காணலாம்.



மணி மண்டபம்



சக்ரத்தாழ்வார்



திருமலையப்ப ஸ்வாமி உத்ஸவர்

**ஜய-விஜயர் :**

தங்க வாயிலின் இருபுறமும் சங்கு, சக்கரங்களை ஏந்திய துவார பாலகர்களான ஜயவிஜயர்கள் காட்சியளிக்கின்றனர்.

**தங்க வாயில் :**

மகாவிஷ்ணுவின் பல்வேறு வடிவங்கள் தங்கத் தகடுகளில் பதிக்கப்பட்டு இவ்வாயில் முழுவதும் ஜொலித்து கொண்டிருக்கிறது. இதைக் கடந்து தான் மூல மூர்த்தியை தரிசிக்கச் செல்ல வேண்டும்.

**ஸ்நபன மண்டபம் :**

பல்லவ ராணி சாமவையால் கட்டப்பட்ட இந்த மண்டபம் திருவிலன் கோயில் என அழைக்கப்படும். இம்மண்டபம் தங்க வாயிலை கடந்தவுடனே காணலாம். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கொலுவு ஸ்ரீநிவாச மூர்த்திக்கு கொலுவு என்கிற சேவை இங்கு நடைபெறும்.

**இராமர் மேடை :**

ஸ்நபன மண்டபத்தைத் கடந்தவுடன் அமைந்துள்ள மேடைகளை இராமர் மேடை என்பர். தெற்கு மேடையில் அங்கதன், அனுமன், சுக்ரீவர் முதலானோரும், வடக்கு மேடையில் அனந்தன், கருடர், விஷ்வக்சேனர் முதலானோ ரும் காட்சியளிக்கின்றார்கள்.

**சயன மண்டபம் :**

இராமர் மேடையைக் கடந்தால் அந்தரால யத்தின் முன் இம்மண்டபம் அமைந்துள்ளது. ஸ்வாமிக்கு ஒவ்வொரு நாளும் நடைபெறும் தினசரி சேவையின் நிறைவு சேவையான ஏகாந்த சேவையின் போது ஸ்ரீபோக ஸ்ரீநிவாச மூர்த்தியைத் தங்க மெத்தையில் சயனிப்பர்.

**குலசேகரபடி :**

இந்த படி ஸ்நபன மண்டபத்திற்கும், கர்ப்ப கிருகத்திற்கும் நடுவில் கல்லினால் அமைந்த படியாகும். குலசேகராழ்வாரின் “படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பேனே” எனும் விருப்பதிற்கிணங்க சதாசர்வ காலமும்

திருவேங்கடமுடையானை தரிசித்த வண்ணம் இருக்கும் இப்படியை "குலசேகரபடி" என்று அன்புடன் அழைப்பர்.

## திருவேங்கடமுடையானின் கர்ப்பாலயம் :

குலசேகரபடியைத் தாண்டினால் கர்ப்பகிருகம். வைகுண்டத்திலிருந்து மஹாலக்ஷ்மியை தேடி பூலோகத்தில் தன் திருப்பாதங்களை பதித்து, திருவேங்கடமுடையானாக, இந்த கலியுகத்தில் கேட்பவர்களுக்கு கற்பக மரமாக வரங்களை அள்ளிக்கொடுக்கும் கலியுக வரதனாக திருவேங்கட முடையான் காட்சியளிக்கிறார். இங்கு போக ஸ்ரீநிவாச மூர்த்தி, கொலுவு ஸ்ரீநிவாச மூர்த்தி, உக்ர ஸ்ரீநிவாச மூர்த்தி, உத்ஸவ ஸ்ரீநிவாச மூர்த்தி என பேர மூர்த்திகளுடன் ருக்மணி சமேத ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீசீதாராம லக்ஷ்மணர் மற்றும் சக்ரத்தாழ்வாரின் பஞ்ச லோக விக்ரகங்களையும் காணலாம்.

## த்ருவ மூர்த்தி - மூலமூர்த்தி :

"ஸ்தானக மூர்த்தி", "த்ருவ மூர்த்தி", "த்ருவ பேரம்" என்றழைக்கப்படும் சுயம்பு மூர்த்தியான திருவேங்கடமுடையான் ஒன்பதடி உயரம், நான்கு திருக்கைகளுடன் காட்சியளிக்கிறார். அவற்றில் மேலிரு திருக்கரங்கள் சங்கு சக்கரம் ஏந்திய வண்ணமும், வலது திருக்கரம் வரத ஹஸ்தமாகவும், இடது திருக்கரம் கடி ஹஸ்தமாகவும் காட்சியளிப்பதைக் காணலாம்.

## போக ஸ்ரீநிவாச மூர்த்தி :

"கௌஸ்துப பேரம்", "மணவாள பெருமாள்" என்றழைக்கப்படும் இம்மூர்த்திக்குத் தான் தினமும் ஆகாச கங்கையிலிருந்து கொண்டு வரப் படுகின்ற தீர்த்தத்தினால் அபிஷேகம் நடைபெறுகிறது. மேலும், ஒவ்வொரு புதன் கிழமையன்று தங்க வாயிலின் முன்பு சஹஸ்ர கலசாபிஷேகம் நடைபெறும். ஏகாந்த சேவையின் போது இம்மூர்த்தி பட்டு மெத்தையில் சயனிப்பார்.

## கொலுவு ஸ்ரீநிவாச மூர்த்தி :

"பலிபேரம்" என்றழைக்கப்படும் இம்மூர்த்தியை தங்க சிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்து கொலுவு சேவை நடைபெறும். அதாவது முந்தைய நாளின் வரவு-செலவு கணக்குகள், பஞ்சாங்கம் வாசித்தல் போன்றவை நடைபெறும்.

## உக்ர ஸ்ரீநிவாச மூர்த்தி :

"ஸ்நபன பேரம்", "வேங்கடத்துறைவர்" என்றழைக்கப்படும் இவர் மிகவும் உக்ரமானவர். கார்த்திகை மாதம் துவாதசி அதாவது "க்ஷீராப்தி துவாதசி" அன்று அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன்பே திருவீதி உலா மேற்கொண்டு ஆலயம் வந்தடைவார்.

## உத்ஸவ ஸ்ரீநிவாச மூர்த்தி (திருமலையப்ப ஸ்வாமி) :

"கல்யாண சக்ரவர்த்தி", "உத்ஸவ பேரம்", "திருவிழா நாயகன்" என்றழைக்கப்படும் இந்த உத்ஸவ மூர்த்தி மூன்றடி உயரத்தில் அமைந்துள்ளார்.



போக ஸ்ரீநிவாசர்



கொலுவு ஸ்ரீநிவாசர்



மூலமூர்த்தி

ஸ்ரீதேவி பூதேவி சமேதராக திருமலையப்ப ஸ்வாமியின் பஞ்சலோக விக்ரகமே திருமலை யில் நடக்கும் உத்ஸவங்களிலும் திருவீதி வலமாக எழுந்தருளச் செய்வர்.



உக்ர ஸ்ரீநிவாசர்

**ஸ்ரீசீதா ராம லக்ஷ்மணர் :**

கர்ப்ப கிருகத்தில் ஸ்ரீராமர், சீதா தேவி, லக்ஷ்மணர் மற்றும் சுக்ரீவரின் செம்பாலான சிலை காட்சியளிக் கின்றன. ஸ்ரீராமர் நடுவில் திரிபங்க வடிவில் இடது கரத்தில் வில்லை ஏந்தி, வலது கரத்தில் கீழ் நோக்கிய அம்பை பிடித்தவாறு நிற்கிறார். சீதா தேவி ராமரின் வலப்புறத்தில் நிற்க,லக்ஷ்மணர், ஸ்ரீராமரைப் போலவே நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.



ஸ்ரீசீதாராம லக்ஷ்மணர்

**ருக்மிணி ஸ்ரீகிருஷ்ணர் :**

கர்ப்ப கிருகத்தில் ருக்மிணி தேவியுடன் ஸ்ரீகிருஷ்ணர் நவநீத ந்ருத்ய வடிவில் அதாவது வலது கரத்தில் வெண்ணெய்யுடன் காட்சியளிக்கின்றார்.

**மடைப்பள்ளி (போட்டு) :**

விமான பிரதக்ஷிண மார்க்கத்தில் அமைந்துள்ள இச்சமையலறையில்தான் ஸ்வாமிக்கு அனைத்து நைவேத்தியங்களும் தயாரிக்கப்படுகின்றது.

**வகுள தேவி :**

“பாசன லக்ஷ்மி, பாசிகா லக்ஷ்மி, மடைப்பள்ளி நாச்சியார்” என்றழைக்கப்படும் ஸ்ரீநிவாசரின் தாயாராக கருதப்படும் இத்தேவியின் ஒரு சிறிய சன்னிதி சமைய லறை நுழைவுவாயிலின் எதிரே அங்கு வேலைகளை கண்காணிக்கும் விதமாக அமைந்துள்ளது.

**தங்கக்கிணறு :**

பக்த ரங்கதாஸரால் தங்கத்தகடுகள் பதிக்கப்பட்ட விமான பிரதக்ஷிண வழியில் மடைப்பள்ளி அருகில் அமைந்துள்ள இக்கிணற்றிலிருந்து தான் நித்ய சமையல் மற்றும் கோயிலின் தேவைக்கு நீர் எடுக்கப்படுகிறது.



ருக்மணி ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீராமர்

**சுதர்ஸன சக்ரத்தாழ்வார் :**

பஞ்ச லோக விக்ரகமான இச்சுதர்ஸன சக்ர வடிவ மூர்த்தி சக்ரத்தாழ்வாராகவே கருதப்படுகிறார். இவருக்கு வருடத்திற்கு நான்கு முறை பிரம்மோத்ஸவ விழாவில் திருவோண நட்சத்திரமன்று, இரத சப்தமி நாளில், அனந்த பத்மநாப சதுர்தசியன்று மற்றும் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, துவாதசியன்று ஸ்வாமி புஷ்கரணியில் சக்ர ஸ்நானம் நடைபெறும்.

தொடரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 50

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 2 | ■ | 3 |
| ■ | 4 | | | | | | 5 | ■ | ■ | ■ | |
| ■ | 6 | | | | | | | | | 7 | |
| ■ | ■ | 8 | | | | | | | | 9 | |
| | 10 | | | | | 11 | ■ | 12 | ■ | | |
| | | | 13 | | | | | | | | |
| | | | ■ | | | | 14 | | | | |
| | | | ■ | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | ■ | | 15 | 16 | 17 | | | 18 | | ■ |
| | 19 | | 20 | | | ■ | | | | 21 | ■ |
| 22 | | | | | | | | | ■ | | 23 |

தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார்,
சென்னை, 8124930259

புதிருக்கு விடை அறிய
70ம் பக்கம்
பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

1. தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி விஷ்ணுவை பிரார்த்தனை செய்ய, மகா விஷ்ணு காட்சி அளித்த இடம்....(7)
4. திருமாலின் கையிலுள்ள சுதர்சனம் என்பதன் பொருள்....(6)
6. கண்ணன் குருக்ஷேத்திரத்தில் அர் ஜுனனுக்கு ....(6) எடுத்து காட்சி அளித்தார்.
13. ஆந்திர மாநிலத்தில் வராக நரசிம் மர் தலம்...(7)
19. பிரம்மாவின் கமண்டலத் தீர்த் தம்...(5)
22. பெருமாள் மீசையுடன் சேவை சாதிக்கும் திவ்ய தேசம்....(8)

## வலமிருந்து இடம்

2. பஞ்ச நாராயணத் தலங்களில் ஒன்று....(3)
5. ஏழு முக்தி தலங்களில் முதன்மை யானது....(2)
7. வைணவத் தலங்களில் பஞ்ச பூதங் களில் அக்னிக்குரிய தலம்....(4)
9. மாயம் செய்வதில் வல்லவரான கிருஷ்ணனை ...(8) என அழைப்பர்.
11. கம்சனின் சகோதரர்கள் மொத்தம்....(3)பேர்.
21. சூரியனும் சந்திரனும் ஒன்றாக இணைந்திருக் கும் நாள்....(4)
23. முன்னோர் வழிபாட்டில் ...(2) முக்கியமாகப் பார்ப்பர்.

## மேலிருந்து கீழ்

3. சகாதேவன் புதுப்பித்த மகாவிஷ்ணு கோயில் ....(9)
8. பெரிய திருவடி என்று போற்றப்படுபவர்....(6)
10. இரண்யாசுரனின் சகோதரன்....(7)
12. நாரையாகப் பிறக்க எண்ணிய ஆழ்வார்....(8)
14. பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட பசுவின் பெயர்....(4)

## கீழிருந்து மேல்

13. பாற்கடலைக் கடைந்தபோது வெளிவந்த விஷத்தை உண்டவர்....(3)
15. சாலக்கிராம கல்லினால் ஆன சுயம்பு மூர்த்தியான எட்டுத் திருத்தலங்களில் ஒன்று....(5)
16. வாமனர் மூன்றாவது அடியை ...(4) மன்னனின் தலை மீது வைத்தார்.
17. ஆனி மாத வளர்பிறை ஏகாதசியின் பெயர்....(4)
18. பரசுராமர் அவதாரம் .....(4) கிரகத்திற்கு அதிபதி.
20. சப்த தீர்த்தங்களில் ஒன்று....(3)
21. பஞ்ச தருக்களில் ஒன்று....(7)
22. இராமாநுஜ நூற்றந்தாதி இயற்றியவர்....(8) அமுதனார்.

# முதலாழ்வார்கள் காட்டும் திருமலையின் இயற்கை எழில்

ஆழ்வார்கள் பன்னிருவருள் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூன்று ஆழ்வார் களையும் முதலாழ்வார்கள் என்பர். இவர்கள் வைணவ பக்தி இயக்கத் திற்கு முன்னோடிகள் ஆவர். ஞான மும், பூலோக மக்களிடம் தத்துவ ஞானம் விளைவிக்கும் ஆற்றலும் உடையவர்கள்.

பொய்கை ஆழ்வார் காஞ்சிபுரத் திலுள்ள திருவெஃகா திருத்தலத்தில் துவாபரயுகத்தின் இறுதியில் சித் தார்த்தி வருடத்தில் ஐப்பசி மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமி திதியில் செவ்வாய்க்கிழமை திருவோண திருநட்சத்திரத்தில் திருமாலின் பாஞ்சஜன்யம் என்னும் சங்கின் அம்சமாக பொய்கையில் பொற்றாமரை மலரில் அவதரித்தார். அதற்கு அடுத்தநாள் பூதத்தாழ்வார் அவிட்டம் திருநட்சத்திரத்தில் கௌமோதகி என்ற கதாயுதத்தின் அம்சமாக மாமல்லபுரத்தில் நீலோத்பவ மலரிலும், அடுத்த நாள் பேயாழ்வார் சதய நட்சத்திரத்தில் நாந்தகம் என்னும் வாளின் அம்சமாக மயிலாப்பூரில் ஆதி கேசவபெருமாள் கோயில் அருகில் ஒரு கிணற்றில் நெய்தல் மலரில் அவதரித்தார். இவர்கள் பாடிய பாடல்கள் முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என்று வழங்கப்பெற்று வருகின்றன, பின்வந்த ஆழ்வார்கள் இவர்களை "இன்கவி பாடும் பரமகவிகள்" என்றும், "செந்தமிழ்ப் பாடுவார்" என்றும் போற்றுவார்கள்.

இவ்வாழ்வார்கள் திருமாலுக்கு அடிமை பூண்டு உலகம் உய்யும்படி வேண்டி, அப்பெருமானின் புகழ்பாடி பக்தி செய்து வந்தனர். திருவேங்கட முடையானிடம் பக்தி கொண்ட இவர்கள் தம் நெஞ்சம் இறைவன் இருக்கும் பாங்கை இக்கட்டுரை விளக்குகிறது.

**பொய்கையாழ்வார் :**

*"எழுவார் விடை கொள்வார் ஈன்துழாயானை*
*வழுவாவகை நினைந்து வைகல் - தொழுவார்*
*வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்*
*மனச்சுடரைத் தூண்டும் மலை."* –26

திருவேங்கட மலையே நித்திய சூரிகளுடைய மனமாகிய விளக்கை தூண்டி ஒளிரச் செய்யும் மலையாகும் என்கிறார்.





*''ஊரும் வரியரவம் ஒண்குறவர் மால்யானை*
*பேரவெறிந்த பெருமணியை - காருடைய*
*மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்*
*எம்மென்னு மாலதிடம்.''* –38

குறவர் பட்டிமேயும் யானைகளைத் துரத்த மாணிக்கக்கட்டியை எறிவர். அங்கு திரியும் மலைப் பாம்புகள் யானையை மேகமாகவும், மாணிக்கத்தை மின்னலாகவும் நினைத்து இனி இடி உண்டாகும் என்று அஞ்சி புற்றினுள்ளே புகும். இப்படிப்பட்ட வளம் கொழிக்கும் மலை திருமலை ஆகும்.

*''பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ*
*வெருவிப் புனம் துறந்த வேழம் - இருவிசும்பில்*
*மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்*
*கோன் வீழக் கண்டுகந்தான் குன்று.''* –40

தினைப்புனங்களில் வந்து மேயும் யானைகளைத் துரத்தும் குறவர்கள் ஒரு கையில் அம்பும் வில்லும் ஏந்தி, மற்றொரு கையில் இருக்கின்ற தீவெட்டியையும் கொண்டு யானையை விரட்டிச் செல்கின்றனர். தீவெட்டியைக் கண்டு அஞ்சி ஓடிய யானை இயற்கையாக விண்ணிலிருந்து விழும் நட்சத்திரங்களைக் கண்டு அது குறவர்களின் தீவட்டி என்று மயங்கி மேல் செல்லாது அப்படியே திகைத்து நின்று விடுவதாகப்பாடும் ஆழ்வாரின் கவித்திறன் நம்மையும் திகைக்க வைக்கிறது.

82வது பாசுரத்தில் பெண்கள் துவாதசி அன்று வாடாத மலர்களை கொண்டு தொடுத்த மாலையோடு திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பிக்க ஏந்தியுள்ள தூபமானது வானத்தில் இடையிடையே தோன்றுகின்ற நட்சத்திரங்கள் மறையும் படியாக ஏற்படுவது திருமலையிலேயே

**பூதத்தாழ்வார் :**


*''நின்றதுவும் வேயோங்கு தண் சாரல் வேங்கடமே''* (25) மூங்கில்கள் ஓங்கி வளர்ந்துள்ள குளிர்ந்த சாரலை உடையது திருமலையே. 46–வது பாசுரத்தில் மிக்க அழகான சோலைகளை உடையது (அணி திகழும் சோலை) என்கிறார்.

*''நெறியார் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து*
*அறியா திளங்கிரி யென்றெண்ணி - பிறியாது*
*பூங்கொடிக்கள் வைகும் பொரு புனற்குன்றென்னும்*
*வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு.''* –53

மலைகளில் பூக்கொடிகள் படர்ந்து பூத்துக் குலுங்குவதை பார்த்த ஆழ்வார், இது மலையா அல்லது பூங்குவியலா என வியந்து, அந்த இயற்கை எழிலில் மனதை பறிகொடுத்து, தான் விரும்பும் மலை வேங்கடமே என்கிறார்.

*''பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்நின்று*
*இருகண் இளமூங்கில் வாங்கி - அருகிருந்த*
*தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்*
*வான் கலந்த வண்ணன்வரை.''* –75

திருமலையில் மதப்பெருக்கால் செரிக்கத்திரியும் ஒரு களிறு, வழியில் தன் துணையான பெண்



## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவனையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது. ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை** (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) **இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.**

– பிரதான ஆசிரியர்

யானையைக் கண்டு அதனை விட்டு அப்பால் செல்லாமல் அதற்கு இனிய உணவாக இரண்டே கணுக்களுடைய மூங்கில் குருத்தொன்றைப் பிடிங்கி அருகில் இருக்கும் தேனடையில் தோய்த்து அப்பிடியின் வாயில் ஊட்டுகின்ற காட்சியை கண்ட ஆழ்வார் பிரம்மிக்கிறார்.

*“போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு*
*ஆங்கலர்ந்த*
*போதரிந்து கொண்டேத்தும் போதுஉள்ளம் ! போது*
*மணி வேங்கடவன் மலரடிக்கே செல்ல*
*அணி வேங்கடவன் பேராய்ந்து.”* –72

குரங்குகள் விடியற்காலை எழுந்து நீர் நிலைகளில் நீராடி அப்போது மலர்ந்த மலர்களை பறித்துக் கொண்டு திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பித்து தோத்திரம் செய்கின்ற காட்சியை கண்ட ஆழ்வார் “பகவத் கைங்கரியம் என்பது மனிதனுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும் உண்டு” என்பதை உணர்த்துகிறார். இதுவே திருமலையின் அபூர்வகாட்சி ஆகும்.

**பேயாழ்வார் :**

39–வது பாசுரத்தில் மேகங்கள் எல்லாம் ஒரு மூலையில் ஒதுங்கும்படி சிகரங்கள் உயர்ந்தோங்கி இருக்கும். நிறைந்த அருவிகள் உடையதும் திருமலையே என்கிறார்.

45–வது பாசுரத்தில் திருமலையில் உள்ள யானைகள் தன் பெண்யானை சூளோடு கோபம் கொள்ளும் போது தன் தந்தத்தை உடைக்கும். அப்போது அதிலிருந்து வெண்முத்துக்கள் உதிரும். அவ்வளவு செழுமையானது திருமலை.

*“புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி*
*உகுமதத்தால் கால்கழுவிக் கையால் -*
*மிகுமதத்தேன்*
*விண்டமலர் கொண்டு விறல் வேங்கடவனையே*
*கண்டு வணங்கும் களிறு.”* –70

பக்தர்களைப் போலவே திருமலையில் உள்ள ஆண் யானை தன் கன்னத்தில் இருந்து ஒழுகும் மதநீரால் கால் கழுவுவதாகவும், தேன் நிறைந்த மலர்களைக் கொண்டு திருவேங்கடவனை வழிபடுவதாகவும் கூறுகின்றார் ஆழ்வார்.

89 –வது பாசுரத்தில் பன்றிகள் செருக்கால் மூங்கில்களை சாயும் படி செய்து நிலத்தை உழுவதை போல செய்யும். ஆகவே, திணைகள் நன்றாக வளரும். இது கீழ் குறவர்களுக்கு உதவி செய்வது போல இருக்கும் என்கிறார்.

*“களிறு முகில் குத்தக்கையெடுத்தோடி*
*ஒளிறு மருப்பொசிகை யாளி - பிளிறி*
*விழ கொன்று நின்ற திருவேங்கடமே மேல்நாள்*
*குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று.”* –71

திருமலையில் உள்ள யானையானது மலைமுகட்டில் படிந்திருந்த மேகத்தை எதிரியானதொரு யானை என்று மயங்கிப் பெரிய வேகத்தோடு சென்று துதிக்கையினால் அம்மேகத்தை குத்துகின்றது. அதனை கண்ட யாளி யானையின் மீது பாய்ந்து அதன் கொம்புகளை முறித்துக் கொல்கிறது. மேலும், சினம் தணியாது அங்கேயே நின்று பெரும் முழக்கம் செய்யப்பெற்றது திருவேங்கடமே என்கிறார்.

ஆழ்வார்களின் அருளிச்செயலில் திருமலையின் கவின் கவிந்த இயற்கை பேரெழிலை சொற்சித்திரங்களாய் அருளியுள்ளனர். இவற்றை கற்பனைகளால் மட்டுமே கருதாது அதன் கலை நயத்தையும் கவிநயத்தையும் உள்ளம் கொண்டு அறிவோம். ஆனால் அப்பாசுரங்களில் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களையும் தெய்வீகம் தவழ்ந்து பொலியும் தன்மையையும் கண்டுகளிக்கலாம்.

**– திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,**
**அம்பத்தூர், 99529 29685**



# மலையப்பனும் ம்ருதஸஞ்சீவநீயும்

பகவத் இராமாநுஜருக்குப் பின்னர் வைணவக் கோட்பாடுகளைப் பரவச் செய்த பெருமைக்குரியவர் சுவாமி வேதாந்த தேசிகனாவார். இவர் காஞ்சி வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள தூப்புல் எனும் சிறிய அக்ரகாரத்தில் பதிமூன்றாம் நூற்றாண்டில், மலையப்ப ஸ்வாமியின் பிரம்மோத்சவ தீர்த்தவாரி திருநன்னாளான புரட்டாசி ச்ரவணத்தன்று பிறந்தார். இவரின் பிறப்பே ஒரு அற்புத நிகழ்ச்சியாகும். குழந்தை பாக்கியமற்ற இவரின் பெற்றோர் திருப்பதி ஸ்ரீநிவாஸனை சேவித்ததால் திருமலையப்பனின் திருமணியின் அவதார மாக, தூப்புலில் திருமலையப்பனின் அம்சமாகவும், வேங்கடநாதனாக சுவாமி தேசிகன் 750 ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்தார்.

சுவாமி தேசிகனின் பிரதான சிஷ்யரும் அவரின் பிள்ளையுமான ஸ்ரீநயினாராசாரியர் பிள்ளையந்தாதியில் **''வென்றிப் புகழ்த் திருவேங்கடநாதன் என்னும் குருவாய் நிகழ்ந்து நின்றும் மண் மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே''** என்று பாடுகிறார். அதாவது"வெற்றியால் உண்டான புகழை உடைய திருமலையப்பன் திருவேங்கடநாதன் என்னும் ஆசார்யனாக அவதரித்து, பின் இந்த பூமியில் அதுவரை இருந்த ஸம்ஸார நோய் களை ஒழித்து அருளினான்'' என்று திருமலையப்பனே வேங்கடநாதன் என்னும் குருவாக அவதரித்ததை விளக்குகிறார்.

சுவாமி தேசிகன் திருவேங்கடமுடையான் மற்றும் அவரின் க்ருபை அதாவது கருணையின் வடிவான பிராட்டியான தயாதேவியை பற்றி "தயாசதகம்" என்னும் 108 சுலோகங்கள் கொண்ட ஒரு ஸ்தோத்திரத்தைப் பாடியுள்ளார். எம்பெருமானின் அனுகம்பா அதாவது தயா தேவியின் பெருமையானது ஸ்ரீமத் இராமாயணம், பாகவதம் போன்ற இதிஹாச புராணங்களில் உள்ளன.

"ஸ்ரீநிவாசனின் கருணையினால் திதியின் கர்ப்பம் பிழைத்தது" என்று பாகவதத்தில் பெருமானின் தயையின் பெருமை கூறப்பட்டுள்ளது.

இந்த ஸ்தோத்திரம் பத்து பிரிவுகளாக, பத்து வகையான விருத்தங்களில் பாடப்பட்டுள்ளது. வேதத்தின் ஸாரத்தை தமிழில் பாசுரங்களாகப் பாடிய நம்மாழ்வாரின் திருவாய்மொழியின் பத்து பத்துகளின் பொருள்களையே தயாசதகம் எடுத்துரைக்கின்றது என்று நம் முன்னோர்கள் கொண்டாடுகின்றார்கள்.



# ஸ்ரீமத் பாகவதம் வினாக்கள்


திருமதி என். ஹேமா,
திருப்பதி.
77020 15076


1. பாகவதம் ச்ரவணம் செய்வதின் பலன் யாது?
2. மார்க்கண்டேய ரிஷிகளுக்கு பிரளயம் காண்பித்தவர் யார்?
3. ஸ்ரீகிருஷ்ணர் சமுத்திர நடுவில் எந்த ஒரு நகரை நிர்மானம் செய்தார்?
4. பாகவதம் நமக்கு எதனை உணர்த்துகிறது?
5. வீட்டில் பாகவதம் நூல் இருப்பதின் பலன் யாது?
6. மத்ஸ்ய ரூபியான பரமாத்மா சத்யவிரதனை எதிலிருந்து காப்பாற்றினார்?
7. சுக முனியின் மூலமாக பாகவதம் கேட்டவர் யார்?
8. வைஷம்பாயர் மூலமாக மஹாபாரதம் கேட்டவர் யார்?
9. ஸ்ரீகிருஷ்ணர் மும்முறை யாருக்கு புத்திரனாகப் பிறந்தார்?
10. அர்ஜுனன் யார் மூலம் பகவத்கீதையை கேட்டார்?


விடைகளுக்கு 56ம் பக்கம் பார்க்க...


ஒவ்வொரு பத்து பாசுரங்களிலும் திருவேங்கடமுடையானின் கருணையின் பெருமையினை சுவாமி தேசிகன் பாடியுள்ளார். அவையாவன. 1) எம்பெருமானே மோக்ஷம் அளிப்பவன். 2) அவன் அனைத்தையும் அறிந்தவன், அனைத்தையும் செய்யும் சக்தியுடையவன். 3) அடியார்களின் விரோதிகளை ஒழிப்பவன்.

4) எல்லாவற்றுக்கும் உபாயமாக இருப்பவன். 5) அடையப்படும் பலனாயிருப்பவன். 6) சிறந்த உபாயமாகிய சரணாகதி என்னும் ப்ரபத்தியாலேயே அடையப்படுபவன். 7) தாழ்ந்தவர்களுடன் கலந்து பரிமாறும் தன்மையன். 8) மிக மேம்பட்டவனாய்த் திருவேங்கடமுடையானாக நிற்பவன். 9) ராம கிருஷ்ணர் போன்ற அவதாரங்களைச் செய்பவன். 10) தன்னை சரணடைந்தவர்களுக்கு பூவுலகத்திலேயே மோக்ஷ ஆனந்தத்தை அருளுபவன். இந்த தயா சதகத்திலிருந்து சில சுலோகங்களைப் பார்க்கலாம்.

மனிதர்களாகிய நாம் பல கோடி பிறவிகள் எடுத்து ஸம்ஸாரத்தில் சுழன்று கொண்டிருக்கிறோம். தாவரம், பசு, பக்ஷி என நாம் இதுவரை எடுத்த பிறவிகள் எண்ணிலடங்கா. கடற்கரை ஓரத்தில் உள்ள மணல் துகள்களைக் கூட எண்ணி முடித்தாலும் முடிக்கலாம். ஆனால், நாம் பல பிறவிகளாகச் செய்து வரும் பாபங்களை எண்ண முடியாது.

இந்நிலையில் ஏதோ ஒரு ஜன்மத்தில், அறியாமல் செய்த ஒரு நல்ல காரியத்தினால் இன்று மனிதப் பிறவியை எடுத்துள்ளோம். அதிலும் பகவத் சிந்தனை, பாகவதர்கள் சம்பந்தம் உள்ள பிறவியை எம்பெருமான் நம் புண்ணிய விசேஷத்தால் அளித்துள்ளான். ஆனால், இந்த பிறவியையும் நாம் எப்படி வீணடிக்கிறோம் என்பதே உலகத்தின் பெரிய விந்தை எனலாம். ஏன் என்றால் இந்த அரிய மானிடப் பிறவியிலும், மேலும் தவறுகளைச் செய்து, பகவானையும், அவனது அடியார்களான பாகவதர்களையும் நிந்திக்கிறோம்.

காமக்ரோதங்கள் நிறைந்த வாழ்க்கையில் நாம் மன அழுத்தத்திற்கு ஆளாவது மட்டுமில்லை, காலத்தை வீண் செய்கிறோம் என்ற ஒரு புரிதல் கூட இல்லாமல் எதையோ தேடி ஓடிக் கொண்டு இருக்கிறோம். இந்த தேடலில் நாம் சம்பாதிப்பது என்னவென்றால் பாபத்தைத் தான். அபராதத்திற்கு மேல் அபராதம் செய்து நாம் அபராத சக்கரவர்த்தியாகத் திகழுகிறோம். அகில லோகத்திற்கும் பாப சக்ரவர்த்தியாகத் திகழுகிறோம். பல புதிய நரகங்களைப் படைத்தால் கூட, நாம் அனுபவிக்க வேண்டிய பாப கணக்கிற்கு அது போதாதாம்!

இந்நிலையில் பாப சக்ரவர்த்திகளான நம்முடன் சண்டை இட வேறு ஒரு சக்ரவர்த்தினி தனியாக வந்து ஆக்கிரமிக்கிறாள். அந்த சக்ரவர்த்தினி வேறு யாருமில்லை "பகவானின் திருக்கல்யாண குணங்களின் ராணியான தயாதேவி". பெருமாளின் துணைவியான பிராட்டி நம்மை மீட்க நம்முடன் சண்டை இட வருகிறாள். ஆம், குழந்தை துன்பத்தில் இருந்தால் எந்த தாய்



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்–19

*யோகரதோ வா போகரதோ வா*
*ஸங்கரதோ வா ஸங்கவிஹீனஃ:।*
*யஸ்ய ப்ரஹ்மணி ரமதே சித்தம்*
*நந்ததி நந்ததி நந்தத்யேவ ।।*

**உள்ளமும் உடலும் ஸுகம் பெறுவதற்காக பலர் "யோகம்" பழகுகிறார்கள். பலர் "போகத்தில்" ஈடுபடுகிறார்கள். இவை போன்ற அனுபவங்களில் பலரோடு சேர்ந்து இருந்தாலும் அல்லது தனித்து இருந்தாலும்... (ஸுகம் பெறுவதில்லை)**

**யாருடைய மனது பிரம்மத்தில் மட்டுமே லயிக்கிறதோ... (ஒருவனேயான இறைவனை மட்டுமே நினைத்து அனுபவிக்கிறதோ) அவனே உண்மையான ஸுகத்தினை அடைகிறான்.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

நிம்மதியாக இருப்பாள். தயா தேவியும் அப்படியே பெருமாளின் குணங்களின் தலைவியான தயா தேவி, நம்மைக் காக்க ஏதோ ஒரு காரணத்தைக் கூறி, அபராத சக்கரவர்த்தியான நம்முடைய காம க்ரோதங்களுடன் சண்டையிட்டு, நம்மை வென்று காக்கிறாள். குழந்தையான நம்மை தயாதேவி பெருமாளின் திருவடிகளில் சரணடையச் செய்து, நம்மை ரக்ஷித்து சந்தோசப் படுகிறாள்.

*''அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தீ*
*கருணே த்வம் சகுணேஷூ ஸார்வ பௌமீ ।*
*விதுஷீ ஸ்த்திதிம் ஈத்ருசீம் ஸ்வயம் மாம்*
*வ்ருஷ சைல ஈச்வர பாத ஸாத் குரு த்வம் ।।''*

– தயா சதகம் 30

சரி, தயாதேவி நம்மை ரக்ஷிக்கிறாள் என்று புரிந்து விட்டது. ஆனால் எப்படி ரக்ஷிக்கிறாள் என்பதே சுவாரசியம்.

தீய செயல்களையே செய்து பாபங்களின் சக்ர வர்த்தியாக விளங்கும் நாம், ஸம்ஸாரத்தில் உள்ள விஷக்காற்றினால் மூர்ச்சையடைந்து திண்டாடுகிறோம். விஷக்கிருமிகள் விஷஜுரத்தை ஏற்படுத்தி துன்புறுத்து வதை போல், நம் பாபங்களே நமக்கு ஸம்ஸார துன் பத்தை ஏற்படுத்துகிறது. ஸம்ஸாரத்தில் மூர்ச்சையடைந் துள்ள நம்மை கொடிய விஷத்திலிருந்து காப்பாற்றும் ம்ருதஸஞ்சீவநீ அளிப்பவள் தயா தேவியே ஆவாள்.

தயாதேவி நமக்கு அளிக்கும் மருந்து அந்த எம்பெருமான் தான், மருத்துவனாகவும், மருந்தாகவும் விளங்கும் மாமாயன் நம் மாதவனே நம் ஸம்ஸார மூர்ச்சையை நீக்க மருந்தை பரிந்துரை செய்யக் கூடியவன். இந்த திருமாலே ஏழு மலையின் மேல் ஆகாச கங்கை, கோனேரி தீர்த்தம், குமாரதாரை போன்ற நீர்ப் பெருக்குகளின் மூலம் நமக்கு மருந்தை அளிக்கிறான். இந்த மருந்தினை நாம் சாப்பிட வேண் டிய அவசியம் கூட இல்லை. மனதினால் மாதவனையும், அவன் உறையும் திருவேங்கட மலையையும், அதில் உள்ள நீர் நிலைக ளையும் நினைத்தாலே நம் ஸம்ஸார விஷம் நீங்கி மூர்ச்சையிலிருந்து விடுபடுகிறோம்.

*''கல சோததி ஸம்பதோ பவத்யா :*
*கருணே ஸந்மதி மந்த்த ஸம்ஸ்க்ருதாயா : ।*
*அம்ருத அம்சம் அவைமி திவ்ய தேஹம் :*
*ம்ருத ஸஞ்ஜீவந மஞ்ஜ நாசலேந்தோ :।।''*

– தயா சதகம் 23

*''வினையேன் வினை தீர் மருந்து ஆனாய் விண்ணோர் தலைவா கேசவா''* என்று தீயவினைகள் நிறைந்தவனாகிய நம் தீயவினைகள் அனைத்தையும் போக்கவல்ல மருந்தாக திகழுபவன் கேசவன் என்று ஆழ்வார் பாடியுள்ளார்.

இப்படி தேவர்களுக்கு நாதனான நம் எம்பெரு மானே நம் வினை தீர்க்கும் கிருஷ்ணன் என்னும் திவ்ய ஔஷதமாவான். ஸம்ஸார ஸாகரத்தை கடக்க, எம்பெரு மானே நமக்கு ஆரோக்கிய சேதுவாக திகழ்கிறான் என்று குழந்தைகளாகிய நமக்கு புரிய வைத்து, சிறப்பான மருந்தான "ம்ருதஸஞ்சீவநீ"யை அளித்து காக்கும் நம் தாயான திருவேங்கடமுடையானின் தயா தேவியை என்னவென்று போற்றுவது!

முகுந்தகிரி டாக்டர் ஸ்ரீ உ.வே. அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை, 9962011293

திருமலை மலையப்ப ஸ்வாமியின் பிரம்மோத்சவ தீர்த்தவாரி திருநன்னாளான புரட்டாசி ச்ரவணத்தன்று மலையப்ப ஸ்வாமியையும், அவரின் அவதாரமாக அவத ரித்த கண்டாவதாரமான நம் ஆசார்யன் சுவாமி தேசிகனை யும் நாம் தொழுது ஆனந்திக்கலாம்.



# மாமுனிகளும் அஷ்ட திக்கஜங்களும்



டாக்டர் கலியன் சம்பத்து, சென்னை.
74010 76411

மன்னுபுகழ் மணவாள மாமுனிகள், ஆழ்வார் திருநகரியில், கி.பி. 1370 ஆம் ஆண்டு (கலியுகம் 4472) சாதாரண வருடத்தில், ஐப்பசி மாதத்தில், மூல நட்சத்திரத்தில், ஆதிசேடன் அவதாரமாக அவதரித்தார். இவர் தந்தையார் திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான்தாசர் அண்ணர் என்றும், தாயார் ஸ்ரீரங்கநாச்சியார் என்றும் கூறுவர். இவர் அவதரித்த நன்னாளை ஸ்ரீவானமாமலை ஜீயர் அவர்கள், ***''செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்...''*** என்று மிக்க உகப்புடன் பாடிக் கொண்டாடியுள்ளார்.

மணவாளர் ஆழ்வார் திருநகரியிலிருந்து, ஸ்ரீரங்கம் எழுந்தருளி, துறவறம் மேற்கொண்டு, "மணவாள மாமுனிகள்" என்ற திருநாமத்துடன் விளங்கிய சமயம், தமக்குரிய பொன்னடிக்கால் ஜீயர் வந்து தண்டனிட்ட போது, தமக்குரிய பெருமை, தன் சீடருக்கும் கிட்ட வேண்டுமென்று, தம் ஆசனத்தில், பொன்னடிக்கால் ஜீயரை இருத்தி, அப்பாச்சியாரண்ணாவுக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் செய்யச் சொன்னார். பல ஆண்டுகள் கழித்து பொன்னடிக்கால் ஜீயர், வடதேச யாத்திரை செய்து விட்டு, ஸ்ரீரங்கம் வந்தபொழுது, தம் ஆசாரியர் ஸ்ரீமணவாளமாமுனிகள் திருநாடு அலங்கரித்த செய்தி கேட்டு மிகவும் வருந்தி, ஸ்ரீசூர்ணபரிபாலனம், திருவத்ய யனம் ஆகியன செய்தபோது, அங்குள்ள சிஷ்யர்கள், ஸ்ரீமணவாள மாமுனிகள் இட்ட கட்டளையாக அவருடைய உபதண்டம், கணையாழி மோதிரம், திருவடி நிலைகள் ஆகியவற்றைக் கொடுத்தனர். பொன்னடிக்கால் ஜீயரும் அவற்றைப் பெற்றுக் கொண்டு வானமாமலைக்கு எழுந்தருளினார். மேற்கண்ட மூன்றும் இன்றளவும் ஸ்ரீவானமாமலை ஜீயர்களிடம் இருந்து வருகின்றன. இங்ஙனம், தம் சீடரிடம் அளவற்ற அன்பு கொள்ள ஸ்ரீமணவாள மாமுனிகளுக்கு, இராமாநுஜர் தம் சீடர்களான கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார் ஆகியோரிடம் காட்டிய அன்பே வழிகாட்டியென்று கூறலாம்.

தம் குடும்ப வாழ்வில் ஏற்பட்ட சீற்றத்தால் இல்லறம் துறந்து, துறவறம் மேற்கொண்டவர் இராமாநுஜர். ஆனால், இல்லறத்தை நல்லறமாக நன்கு நடத்தியும், பகவத் கைங்கர்யத்திற்காகவே துறவறம் மேற்கொண்டவர் மணவாளமாமுனிகள். அதனால்தான், வைணவர்கள், இராமாநுஜரை "ஜீயர்" என்றும், மணவாள மாமுனிகளை "பெரிய ஜீயர்" என்றும் அழைக்கின்றனர் என்பர். மாமுனிகள் கி.பி. 1425 முதல் 1443 வரை, 18 ஆண்டுகள் ஸ்ரீரங்கத்தில் வசித்து தரிசன நிர்வாகம் செய்தார் என்பர்.

மணவாள மாமுனிகள், 73ஆண்டுகள் அருட்பணி புரிந்து, ருத்ரோத்காரி ஆண்டு (கி.பி.1443) மாசி மாதம், கிருஷ்ணபட்சம், சனிக்கிழமையன்று துவாதசி, திருவோண நட்சத்திரத்தில், திருநாட்டிற்கு எழுந்தருளினார் என்பர். ஸ்ரீரங்கத்தில், "தவராசன்" படுகையில், திருப்பள்ளிப்படுத்தப்பட்டுள்ளார் (திருவரசு) என்றும் கூறுவர்.

### அஷ்டத்திக்கஜங்கள் :

வைணவத்தின் நந்தா விளக்காய்த் திகழும், ஸ்ரீமணவாள மாமுனிகளைத் தம் ஆசாரியராக ஏற்ற,


1)ஸ்ரீவானமாமலை ஜீயர், 2)பட்டர்பிரான் ஜீயர், 3) திருவேங்கட ராமாநுஜ ஜீயர், 4) கோயில் கந்தாடை அண்ணன், 5) பிரதிவாதி பயங்கரம் அண்ணன், 6) எறும்பியப்பா, 7) அப்பிள்ளை, 8) அப்பிள்ளார் ஆகியோரை அஷ்டதிக்கஜங்கள் என்பர். இவர்கள் வைணவத்தின் உயர்வையும், பெருமை களையும் மாமுனிகள் வழி நின்று வளர்த்தனர்.

**ஸ்ரீவானமாமலை ஜீயர் :**

"பொன்னடிக்கால் ஜீயர்" என்று பெயரிடப்பட்ட இவர், மாமுனிகளிடம் தொடர்பு கொண்ட நாளிலிருந்து, அவரைப் பிரியாது தொண்டு செய்து வந்தார். தாம் வடதேச யாத்திரை மேற்கொண்டபோது பல மடங்களை நிறுவி, வரவரமுநி ஸம்ப்ர தாயத்தைப் பரப்பினார். திருவரங்கத்தில் உள்ள பெரிய ஜீயர் மடத்தில், மாமுனிகள் திருவுருவச் சித்திரங்கள் ஏற்படுத்தினார். வேற்றுமொழி பேசுவோரிடம், பெரிய ஜீயரான மாமுனிகளின் ஸம்பந்தத்தை ஏற்படுத்தினார். இவர் *"செந்தமிழ் வேதியர்"* என்று தொடங்கும் மாமுனிகள் குறித்த திருநாள் பாட்டு அருளினார்.

**பட்டர்பிரான் ஜீயர் :**

இவருக்கு அத்தங்கி கோவிந்த தாஸ ரப்பர் என்று பெயர். ஸ்ரீமணவாள மாமுனி களின் திருவடிகளையே தஞ்சமாகப் பற்றியபின், பட்டர்பிரான் ஜீயர் ஆனார். இவர், "எம்பெருமானார் திருவடிகளே சரணம்" என்ற உண்மையை அறிய, "அந்தி மோபாய நிஷ்டை" என்ற நூலை இயற்றி னார். இவர் எம்பெருமானார்க்கு எம்பாரைப் போல, மாமுனிகளுக்கு நிழல் போல விளங்கி எப்பொழுதும் பிரியாது தொண்டு செய்தார். மாமுனிகள் சரமதசையில் இருந்தபோது, பட்டர்பிரான் ஜீயரை அழைத்து, "நீர் எனது ஒரு கையல்லவோ! நாம் செய்வதாக எண்ணி, பஞ்ச ஸம்ஸ்கா ரங்களையும் செய்வீர்" என்றுகூறி, அண்ண



ராய சக்ரவர்த்தி, தோழப்பர், நாயனார் என்போரை அவரிடம் ஒப்ப டைத்தார். இவர், ஸ்ரீராமாநுஜர் நியமித்த 73 சிம்மாசனாதிபதிகளில் ஒருவரான அரணபுரத்தாழ்வான் வம்சத்தில் வந்தவர்.

**திருவேங்கடராமாநுஜ ஜீயர் :**

இவர் மாமுனிகள் குறித்து, *"வா செய்யவென்று"* என்று தொடங்கும் வாழித்திருநாமம் அருளினார். திருக்குருகைப்பிரான் பிள்ளையைப் போல, மாமுனிகள் மடத்து இளவரசாய் எல்லார்க்கும் வேண்டிய அன்புடையவராய் விளங்கித் தொண்டு செய்தார். இவ ருக்கு, திருவாய்மொழி ஈடும், ஸ்ரீபாஷ்யமும் கோயில் கந்தாடை அண்ணனும், பிரதிவாதி அண்ணனும் உபதேசித்தனர் என்பர். மாமுனி களின் இறுதி நாளில், அவரிடமிருந்து அர்ச்சா திருமேனியைப் பெற்றுக் கொண்டார்.

**கோயில் கந்தாடை அண்ணன் (வரத நாராயண குரு) :**

இவர் முதலியாண்டான் வம்சத்தவர். இவர் மாமுனிகள் குறித்த *"முந்தை மறைத்தமிழ்"* என்று தொடங்கும் வாழித்திருநாமம் அருளினார். தவிர, "வர வர முனி அஷ்டகம்", "மணவாள மாமுனிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற நூல்களும் அருளினார். மாமுனிகள் இவரை, "பகவத் விஷய சிம்மாசனத்தில்" அமர்த்தினார்.

**பிரதிவாதி பயங்கரம் அண்ணா :**

இவர் "ஸ்ரீபாதாதிகேச மாலை", "ஸ்ரீவரவரமுனி ஸுப்ரபாதம்", "வரவரமுனி சதகம்", "வரவரமுனி ப்ரபத்தி", "வரவரமுனி மங்களம்" ஆகிய நூல்கள் யாத்துள்ளார். இவரை, ஸ்ரீபாஷ்ய சிம்மாசனத்தில் அமர வைத்து, மாமுனிகள், அபிஷேகம் செய்துள்ளார். இவர் மாமுனிகள் குறித்துப் பாடியுள்ள, *"செய்ய தாமரைத் தாளினை வாழியே.... புந்தி வாழி புகழ் வாழி வாழியே"* என்ற எட்டு அடிகளும், *"அடியார்கள் வாழ... இன்னுமொரு நூற்றாண்டிரும்"* என்ற நான்கு

அடிகளும் இன்றும் நம் ஸ்ரீவைஷ்ணவ சாற்று முறையின் போது, சேவித்து வருகிறோம்.

இவர், எம்பெருமானார்க்கு ஸ்ரீகூரத்தாழ்வான் அமைந்தது போல, மாமுனிகளுக்கு அமைந்தார் என்பர். இவர், மாமுனிகள் திருமலைக்கு எழுந்தருளியபொழுது மாமுனிகள் நியமித்தபடி, திருவேங்கடவன் சன்னதியில், சுப்ரபாதம், ப்ரபத்தி, மங்களாசாசனம் சேவித்தார். இந் நிகழ்ச்சிக்குப்பின், இன்றளவும், ஏழுமலையான் சன்னதி யில் காலையில், சுப்ரபாதம் சேவிக்கப்படுகிறது.

**எறும்பியப்பா :**

இவர், "ஸ்ரீசைலேசாஷ்டகம்", "பூர்வதினசர்யா", "உத்திரதினசர்யா", "வரவரமுனி சதகம்" என நான்கு நூல்கள் எழுதியுள்ளார். உபதேசரத்தினமாலையில், *"மன்னுயிர்காளிங்கே"* என்ற இவரது வெண்பா இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. மாமுனிகள் இவருக்குத் தம்மு டைய அர்ச்சா விக்ரகம், பாதுகை மற்றும் உத்தரீயம் கொடுத்துள்ளார். மாமுனிகள், இவருடன் பெரிய பெருமாள் மங்களாசாசனத்திற்குப் போகும்போது, நாள் ஒன்றுக்கு ஒரு பாசுரமாக உபதேசரத்தின மாலை தொகுத் தார். இராமாநுஜருக்கு வடுக நம்பி அமைந்தது போல, இவர் மாமுனிகளுக்கு அமைந்தார் என்பர்.

**அப்பிள்ளை :**

இவர், மாமுனிகள் குறித்து, *"சீராரும் செங்கமலத் திருவடிகள்"* என்று தொடங்கும் வாழித்திருநாமம் அருளினார். மாமுனிகளின் திருவாய்மொழி முதலிய அருளிச்செயல் காலக்ஷேப பணிகளுக்கு உற்ற துணை யாக இருந்தார்.

**அப்பிள்ளார் :**

மாமுனிகள் மடத்தின் நிர்வாகத்தை இவர் ஏற்றுக் கொண்டார். தளிகைக்காண பணிகளைக் கண்காணித் தார். இவர், மாமுனிகள் குறித்து, *"மல்லிகையில் வகுள மலர்"* என்று தொடங்கும் வாழித் திருநாமம் அருளினார். தவிர, "சம்பிரதாய சந்திரிகை" என்ற நூல் எழுதியுள்ளார். மாமுனிகள் இவருக்கு தம் அர்ச்சா திருமேனியை அளித்துள்ளார்.

**முடிவுரை :**

திருவரங்கம், பல்லவராயன் மடத்தை மாமுனிக ளுக்கு, நம்பெருமாள் அளித்தார் என்பர். அங்கு, 10 மாத காலம், நம்பிள்ளை ஈட்டின் அடிப்படையில் திருவாய் மொழி காலக்ஷேபம் செய்த மாமுனிகளுக்கு நம்பெருமாள்.

*"ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி*
*குணார்ணவம்!*
*யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்!!"*

என்ற தனியனைச் சமர்ப்பித்து ஆசி கூறினார் என்பர். இப்படிப்பல பெருமைகள் உடையவர் ஸ்ரீமண வாளமாமுனிகள். மாமுனிகள் நமக்குச் சொன்ன,

*"நல்லமண முள்ளதொன்றை நண்ணி யிருப்பதற்கு*
*நல்லமண முண்டாம் நயமதுபோல் - நல்ல*
*குணமுடையோர் தங்களுடன் கூடி யிருப்பார்க்கு*
*குணமதுவே யாம்சேர்த்தி கொண்டு"*

– உபதேசரத்தின மாலை – 69

என்ற நற்செயலை மேற்கொண்டு வாழ்வோம்.

*"மன்னுயிர்காள் இங்கே மணவாள மாமுனிவன்*
*பொன்னடியாம் செங்கமலப் போதுகளை...*
*உன்னிச்*
*சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மை*
*கரத்தாலே தீண்டல் கடன்"*


என்ற எறும்பியப்பா அருளிச் செய்த வெண்பா கூறி, மாமுனிகள் திருவடிகள் வணங்கிப் பேறு பெறு வோமாக!


## ஸப்தகிரி வாசகர்களுக்கு...

ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு **0877-2264360** தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.orgக்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.

தாஸ சாகித்யம்

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



## ஸ்ரீபாதராயர் சாகித்யத்தில் திருவேங்கடவன்:

ஸ்ரீபாதராயர் இயற்றிய மற்றொரு பாடலில், *''பூஷண கேபூஷண இது பூஷண'' சேஷகிரிய வாசா (மேலே) ஸ்ரீவேங்கடேசாய''* எனும் கீர்த்தனை சிறப்பு பெற்றதாம். இந்த பல்லவியில் பூஷணம் என்றால் அழகு.

திருவேங்கடமுடையான் இந்த மலைமேல் எழுந்தருளி இருப்பதே அழகு என்று கூறுகின்றார்.

*''த்ருஷ்ட்வா திசி திசி ஸ்வீயான் தயயாபால யன்னிவ!*
*வர்ததே விஸ்வதஸ்ச கூஷர்வேங்கடே வேங்கடேஸ்வர:'' !*

"நான்கு திசைகளிலுள்ள தன் பக்தர்கள் அனைவரையும் காண்பதற்காகவே உயர்ந்த மலையான வேங்கட மலையின் மேல் திருவேங்கடமுடையான் அற்புதமாக கொலுவீற்றிருக்கின்றார் என்கிறார். மலையின் மேல் நின்றுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீபாதராயரின் துதிகளில் மற்றொன்று *''ஸ்மரிஸிதவரனு காய்ய''* புகழ் பெற்றதாகும். இது மூன்று சரணங்களோடு ஸ்ரீநிவாசனின் தத்துவமும், பக்தியின் சார்பு நிலையையும் தெரியப்படுத்துகின்றது.

*''ஸ்மரிசிதவரனு காய்வனம்ம சூர்யானேக ப்ரபாவ!*
*சுரமுனிகள சஞ்ஜீவ! சிரி! வேங்கட எம்மனு பொவெர!!''*

துதிப்பவர்களை காக்கும் இந்த திருவேங்கடவன் பல சூரியக் கதிர்களின் ஒளியாக பிரகாசிப்பவர். இவர் தேவதைகள், முனிவர்கள் ஆகியோருக்கு சஞ்சீவி. லஷ்மி சமேதராக அனைவருக்கும் அருளைப் புரிந்து காக்கின்றார்.

*''வைகுண்டதிந்தலி பந்து! ஈ சேஷாசலதலிநிந்து!''*

என்ற பாடலில் வைகுண்டத்திலிருந்து வந்து இந்த சேஷாசல மலையில் நின்றுள்ள திருவேங்கட

முடையானே, பக்தர்களைக் காப்பாற்றக் கூடிய இலட்சியமே உன்னுடையது. எனக்கு குலதெய்வம் நீ, சகல மக்களையும் காப்பாற்றுபவன் நீ, கமலநயன கல்யாண சக்ரவர்த்தியாக பிரகாசிப்பவன் நீ என்று கூறுகிறது.

*ஜயது தோஷவநாசா ! ஜய! ஜயது! மஹிமா*
*விசேஷ!''*

என்ற கீர்த்தனையில்

ஹே! ரங்கவிட்டலா ஸ்ரீநிவாசா ! உமக்கு ஜெயம். நீ துன்பங்களைத் தீர்ப்பவன் ! விநாசகன். மகிமை பெற்றவன். கமலத்திற்கு கமலனுக்கு தந்தை, ஜகதீசன், கஜராஜரட்சகன். புண்யஸ்லோகன், ஜனார்த்தனன் மோகன சௌந்தர்யன், கருணைக்கடல், பக்திக்கு உகந்தவனான உம்மைப் புகழ்ந்து பாடுவது மிக்க ஆனந்தமயமானது.

அர்ச்சா மூர்த்தியான திருவேங்கடமுடையானும் திருவவதாரங்களும் ஒன்றே என எண்ணிய ஸ்ரீபாதராயர் திருவேங்கடமுடையானை நரசிம்மனாகவும், இராம ராகவும், கிருஷ்ணராகவும் பூஜித்தார். இம்மும்மூர்த்திகள் க்ருத, த்ரேதா, த்வாபர யுகத்தில் அர்ச்சா மூர்த்திகளாகப் புகழ் பெற்றவை.

*க்ருதேது நாரசிம்ஹேபூத்!*
*த்ரேதாயாம் ரகுநந்தன: த்வாபரே வாசுதேவச்ச!*
*கலௌ வேங்கடநாயக:!!*

என்ற புராண அனுச்சாரப்படி ஸ்ரீ பாதராயர் ஸ்ரீநிவாசரை மும்மூர்த்தியாக புகழ்ந்து பாடி பெருமை பெற்றார்.


*''சாகி பாரய்யநீனு! பாகினமிசுவே !*
*யோகிகளரசனே ஸ்ரீநிவாசா !*
*போகிசயனனே நின்ன பாகவதரு பந்து மாடிதெ*
*நின்ன பாகி லொளு நிந்தி ஹரோ !''*

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...



# திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி பிரம்மோத்ஸவம் 2020 அக்டோபர் 16 முதல் 24 வரை



17-10-2020
சனிக்கிழமை

பகல்:
சிறியசேஷவாகனம்




இரவு:
ஹம்ச வாகனம்



18-10-2020
ஞாயிற்றுக்கிழமை

பகல்:
சிம்ம வாகனம்




இரவு:
முத்துப்பந்தல் வாகனம்

# திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி பிரம்மோத்ஸவம் 2020 அக்டோபர் 16 முதல் 24 வரை



**19-10-2020 திங்கட்கிழமை**

பகல்:
கல்பவிருக்ஷ வாகனம்



இரவு:
சர்வபூபால வாகனம்



**20-10-2020 செவ்வாய்க்கிழமை**

பகல்:
பல்லக்கில்
மோகினி அவதாரம்



இரவு:
கருட வாகனம்

# திருமலையப்ப ஸ்வாமி
# நவராத்திரி பிரம்மோத்ஸவம்
# 2020 அக்டோபர் 16 முதல் 24 வரை

**21-10-2020**
**புதன் கிழமை**



பகல்:
அனுமத் வாகனம்



இரவு:
யானை வாகனம்

**22-10-2020**
**வியாழக்கிழமை**




பகல்:
சூரியப்பிரபை வாகனம்



இரவு:
சந்திரப்பிரபை வாகனம்



திரு. அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்களிடமிருந்து 04-10-2020 அன்று தி.தி.தே. முழு கூடுதல் பொறுப்பு செயலாட்சித்தலைவராக திருமலை ஆலயத்தில் பதவிபொறுப்பினை ஏற்கும் திரு. ஏ.வி.தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ்.அவர்கள்.

திரு. ஏ.வி.தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்களிடமிருந்து 10-10-2020 அன்று தி.தி.தே. புதிய செயலாட்சித் தலைவராக திருமலை ஆலயத்தில் பதவியேற்கும் டாக்டர் கே.எஸ்.ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள்



# நவராத்திரி திருவிழா

முனைவர் ச.செந்திலாண்டவன்,
சென்னை, 94445 82856



சிந்து சமவெளி நாகரீகக் காலத்திலேயே சக்தி வழிபாடு இருந்ததற்கான சான்றுகளாகப் பெண் தெய்வ வடிவங்கள் கிடைத்துள்ளன. இதனால் சக்தி வழிபாட்டின் பழைமை நமக்குப் புலனாகின்றது!

ரிக்வேதத்தில் "சக்தி"யை ராத்திரி என்று அழைக்கும் வழக்கம் உள்ளது.

இந்தியாவில் ஆதிசங்கரரால் ஆறு வகைச் சமயங்கள் நிலைபெற்றன. சக்தியை முழு முதற் பொருளாக உடையது சாக்தம். திருமந்திரப் பாடல்கள் பல சக்தி வழிபாட்டின் நிலையை உணர்த்துகின்றன.

*"அவளை அறியா அமரரும் இல்லை*
*அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை*
*அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை*
*அவளன்றி ஊர் புகும் ஆறு அறியேனே"*

*–திருமந்.1029*

சாக்தத்தில் லலிதா மகாதிரிபுரசுந்தரியே முழு முதல் தெய்வம்! இவளே ஆதிபராசக்தி! நவராத்திரியில் இப்பராசக்தியையே, துர்கா பரமேஸ்வரியாகவும், மகாலட்சுமியாகவும், சரஸ்வதி தேவியாகவும் வழிபாடு செய்கிறோம்!

இவ்வாறு மலைமகள், அலைமகள், கலைமகள் என்று மூன்று மூர்த்திகளாகச் சொன்னாலும், முப்பத்து முக்கோடி மூர்த்திகளாகச் சொன்னாலும், அத்தனையாகவும் இருப்பவள் ஆதிபராசக்தியே! இதனை லலிதா சகஸ்ரநாமம் கூறும்போது, பராசக்தியாகிய அவளே படைப்புத்தொழில் செய்கிறாள்! (சிருஷ்டி கர்த்ரீ – ப்ரம்ம ரூபா), பராசக்தியாகிய அவளே காத்தல் தொழில் செய்கிறாள்! (கோப்தரீ – கோவிந்த ரூபிணி), பராசக்தியாகிய அவளே அழித்தல் தொழில் செய்கிறாள்! (ஸம்ஹாரிணீ – ருத்ரரூபா) என்று கூறுகின்றது.

ஒரே பராசக்திதான் வெவ்வேறு உருவங்களில் தோன்றி வெவ்வேறு தொழில்களைச் செய்கின்றது!

துர்கையாக இருக்கின்றபோது வீரம், துணிவு, சக்தி எல்லாவற்றையும் தருகிறது! மகாலட்சுமியாக இருக்கின்றபோது சகல செல்வங்களையும் தருகின்றது! சரஸ்வதியாக இருக்கின்றபோது கலை, ஞானம் அனைத்தையும் தருகின்றது!

உலகில் இயங்கும் தெய்வங்கள் எல்லாம் பிரம்மம் எனப்படும் முழுமுதற் பொருளில் ஆண்டிற்கு ஒரு முறை ஐக்கியமாகும் என்பது வேத அறிஞர் கூற்று! எல்லாம் இப்படி ஒரே லயமாக ஆகும் நாளே மகாலயம் அல்லது மாளயம் என்று கூறுகின்ற வழக்கம் வந்தது. இதனால் புரட்டாசி மாத அமாவாசை மகாளய அமாவாசை! தட்சிணாயன புண்ணிய காலத்தில் வருவது! அன்றைய நாளில், தாம் ஐக்கியமாகிய பரம்பொருளில் புதிய சக்தியைப் பெற்று பராசக்தி ஒன்பது சக்தியாகப் பிரிகின்றாள் என்பது ஒரு வழக்கு! ஒன்றை ஒன்பதாக்கும் சக்தி பராசக்திக்கு உண்டல்லவா?



பொதுவாக, நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள் கொள்வர்; அதைவிட ஒன்பது வகைச் சக்தியாகச் சிவசக்தி பிரிந்து அருள் பாலிக்கிறாள் என்பது மிகப் பொருத்தமாக இருக்கிறது. அந்த ஒன்பது சக்திகளையும் மூன்று சக்திகளாகச் சுருக்கி – இச்சா சக்தியாக – மலைமகளும், கிரியா சக்தியாக – அலைமகளும், ஞானசக்தியாக – கலைமகளும் எனக் கொண்டாடுவதே நவராத்திரி எனில் மிகையில்லை! முன்னரே கூறியதுபோல – ரிக்வேதம், ராத்திரி – சக்தியென்றே குறிப்பிடுவதும் எண்ணத்தக்கது!

ஆகவே, மகாளயபட்ச அமாவாசை அடுத்த பிரதமை முதல் விஜயதசமி வரை நவராத்திரி நம் பாரத நாட்டில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதை நாம் காண்கிறோம்!



நவராத்திரியில் "கொலு" வைத்தல் என்பது பாரம்பரியமான ஒன்று! உலகத்தில் உயிர்கள் பரிணாம வளர்ச்சியின் வழியே, விரிந்து, பரந்து விளைவை உண்டாக்குகின்றன! மணிவாசகர் கூறுவது போல,

*"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*
*வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்"*

பரிணாம வளர்ச்சி காட்டப்படுகிறது. அந்த வகையில் உயிர்களின் ஆன்மீக முன்னேற்றம் எப்படி நிகழும் என்பதைக் குறிக்க ஒன்பது படிகள் வைத்து முதற்படியில் ஓர் அறிவுள்ள புல், செடி, கொடிகள், தாவரங்கள் பொம்மைகளாகக் காட்சியாகின்றன! இரண்டாம் படியில் ஈரறிவு உயிர்களான நத்தை, சங்கு முதலிய உயிரிகளின் பொம்மைகள்! மூன்றாம்படியில் மூவறிவு உயிர்களான எறும்பு முதலான உயிர்களின் பொம்மைக்காட்சி! நான்காம் படியில் நாலறிவு உயிர்களான நண்டு, வண்டு முதலியன காட்சி! ஐந்தாம் படியில், ஐந்தறிவுடைய பறவைகள், விலங்குகளின் காட்சி!



ஆறாம் படியில் ஐந்தறிவோடு ஆறாம் அறிவாகிய பகுத்தறிவோடு பிறந்த மனிதப் பிறவியைக் குறிக்கும் விதமாக – வித வித மானிட உருவங்கள்!ஏழாம் படியில் மனிதனாக இருந்து, இறைபக்தியினால் மனிதனும் தெய்வமாகலாம் என்ற உயரிய பதவியடைந்த மகான்கள், ஆசார்யர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்களின் அரிய காட்சி! எட்டாம் படியில், இறைவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலுள்ள தேவர்கள், நவக்கிரகங்கள், திக்குப்பாலர்கள் ஆகியோர்களின் காட்சி!





ஒன்பதாம் படியில், இறைநிலையை உணர்த்தும் சக்தி கலசம் மற்றும் கடவுளர் சிலைகள், முப்பெருந்தேவியர் சிலைகள் காட்சி! இவ்வாறாக உயிர்களின் படி நிலையை பரிணாம நிலையை உணர்த்தி, நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும், இறை ஆற்றலின் திருவருள் தேவை என்பதை உணர்த்தி, முதல் மூன்று நாட்களிலும் வீரம், துணிவு, வெற்றி வேண்டி, துர்கையை பராசக்தியின் வடிவாகப் போற்றி வணங்க வேண்டும்! அடுத்த மூன்று நாட்களிலும் வாழ்வதற்குப் பொருள் வேண்டும்; வாழ்விதிலும் பொருள் வேண்டும் அல்லவா? அதற்காகச் செல்வத்தை வேண்டி மகாலட்சுமியையும் போற்றி வழிபட வேண்டும்!



அடுத்த இறுதி மூன்று நாட்களிலும் கல்வி, அறிவு, சகல கலைகளின் ஞானம் வேண்டி, சரஸ்வதியை வணங்கி போற்றி வழிபட வேண்டும்!

நவராத்திரியில், நவதுர்கைகள் முறையே சைலபுத்ரி, ப்ரம்மசாரிணி, சந்திர காந்தா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயிணி, காளராத்திரி, மஹாகௌரி, சித்திதாத்ரா வடிவில் பூஜிப்பதால் நாம் தெய்வீக சக்தியை பெற்று நம் வாழ்வில் தடைகற்களை கடந்து, தீய எண்ணங்களை விடுத்து நல்ல முறையில் சகல வளமும் பெற்று வழலாம்.



நவராத்திரியின் முதல் நாள் மதுகைடபரை அழித்தொழிக்க உருவம் எடுத்த பராசக்தியை மகேஸ்வரியாக அலங்காரம் செய்து வழிப்படுவர். இரண்டாம் நாள் பராசக்தி ராஜராஜேஸ்வரியை கௌமாரியாக அலங்காரம் செய்வர். மூன்றாம் நாள் வராகித்தேவியாகவும், நான்காம் நாள் செல்வங்களை வழங்கும் தாயாரான மகாலக்ஷ்மியாகவும், ஐந்தாம் நாள் வைஷ்ணவியாகவும், ஆறாம் நாள் இந்திராணியாகவும், ஏழாம் நாள் கல்வியையும் ஞானத்தையும் வரமாக அளிக்கும் கலைவாணியான சரஸ்வதியாகவும், எட்டாம் நாள் நரசிம்மியாகவும், ஒன்பதாம் நாள் சாமுண்டி தேவியாகவும் அலங்கரித்து வழிபடுவது மரபாகும். நவராத்திரியில் இவ்வலங்காரங்களில் தேவியை தரிசிப்பதால் நம் வாழ்வில் தீயவைகள் அகன்று நல்லவை பெருகும் என்பது நம்பிக்கையாகும்.



ஒவ்வொரு நாளும் அலங்கார அழகு பொலியும் கொலுவில் வீற்றிருக்கும் தெய்வங்களைப் போற்றி வணங்கிப் பழங்கள், சுண்டல் முதலிய படையல்கள் செய்து, குழந்தைகளுக்கும், சுமங்கலிகளுக்கும் கொடுத்து மகிழ்ந்து, ஆடல் பாடல்களோடு கொண்டாடப்படும் நவராத்திரி விழா! கலை விழா! மகிழ்ச்சி விழா! அன்பு விழா! அனைவரும் கொண்டாடி மகிழ்வோம்! குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே!





# 108 திவ்விய தேச வைபவம்



# திருக்கோளூர்

## (நவத்திருப்பதி–7)

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

தென் திசைத் திலகமான திவ்யதேசம். நவ நிதிகளும் இந்த க்ஷேத்திர பகவானைச் சரணம் அடைந்ததால் "திருவை" உடைய ஊர். ஒருசமயம், குபேரன் சிவ பெருமானை வணங்க கைலாயம் சென்றான். அங்கு சிவனையும் பார்வதியையும் தனித்திருந்த நிலையில் கண்ட குபேரன் பார்வதியின் அழகில் மயங்கி தவறான எண்ணத்துடன் பார்வதியை பார்த்தான். கோபம் கொண்ட பார்வதி "நீ உன் வடிவை இழந்து, ஒரு கண்ணை இழந்து, உன் செல்வங்களையும் இழப்பாய்...." என்று சாபமிட, குபேரன் உடனே மனம் வருந்தி மன்னித்து சாபத்துக்கு விமோசனம் வேண்டினான்.

செய்த குற்றத்துக்கு தண்டனையை நீக்க மறுத்த பார்வதி, இழந்த செல்வம் வேண்டுமென்றால் தாமிர வருணி நதிக்கரைக்குச் சென்று, அங்கு கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை வழிபட்டு தவம் செய்யப் பணித்தாள். குபேரனுக்கு முன்பாகவே சங்கநிதி, பதுமநிதி என்ற ஒன்பது நிதிகளும் இத்தலத்திற்கு வந்து தவம் செய்து இந்த எம்பெருமானை அடைக்கலம் என்று அடைந்திருந்தன. அவைகள் மீது இரக்கம் கொண்ட பகவான், அச்செல்வங்களின் மீது தானே பள்ளிகொண்டு காப்பாற்றியதால் "வைத்தமாநிதி" என்ற திருநாமம் பெற்றான்.

குபேரனும் இங்குவந்து தவம் செய்து மாசிமாத சுக்லபக்ஷ த்வாதசியில் தன் தகுதிக்கேற்ப செல்வத்தின் ஒரு பகுதியைப் பெற்றான். தர்மகுப்தன் என்கிற பிராமணன், வறுமையில் தவித்து, எட்டுப்பிள்ளைகள் இரண்டு பெண்களுடன் பரத்வாஜரை சரணடைய, அவர் முற்பிறவியில் செல்வச் சீமானான பிராம்மணனாக இருந்ததாகவும், யாசித்தவர்களுக்கு கொடாததால் திருடர் திருடிச் செல்ல, மனநோயால் இறந்ததாகவும், இப்பிறவியில் வறுமைக்கு இதுவே காரணம் என்று சொல்லி திருக்கோளூர் பெருமானை வணங்கச் சொன்னார். பிராம்மணனும் இங்கு வந்து தாமிரவருணியில் நீராடி, பெருமாளை சேவித்து நலம் பெற்றான் என்பர்.

தன்னை அண்டி சேவித்தவர்களுக்கு செல்வத்தை அளந்து கொடுத்ததால் ஒரு மரக்கால் அளவைத் தன்னுடைய திருவடிக்குக் கீழே வைத்துக் கொண்டிருப்பதை எப்போதும் சேவிக்கலாம். ஆதனூர் ஆண்டாளுக்கும் ஐயன் நினைவு வரும்.

உலகத் தர்மத்துக்கு தோல்வி வந்து, இங்கு வந்து பெருமாளை சேவித்ததாகவும், தர்ம தேவதையைத் தேடி தேவர்களும் இங்கு வந்ததாகவும், இதனை அறிந்த அதர்மமும் இங்கும் வந்து தர்மத்துக்கு

தொல்லைக் கொடுத்ததாகவும், உடனே தர்மதேவதை இப்பெருமானின் திருவடியை தியானித்து அதர்மத்துடன் சண்டையிட்டு விரட்டியதாகவும், அதனால் இவ்வூருக்கு அதர்மபிசுணம் என்கிற பெயர் உண்டென்றும் சொல்வர்.

### சிறப்புகள்

எம்பெருமானாரின் திருவுள்ளத்தைக் கவர்ந்த திருத்தலம், அவர் காலத்தில் வாழ்ந்து, அவரை தன் இல்லத்தில் அதிதியாக உபசரித்து பாக்யம் பெற்ற பெண் பிள்ளை வாழ்ந்த திவ்யதேசம்.

### ஸ்ரீவைஷ்ணவாமுது:

திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம் என்பதை வைணவ உலகத்துக்கு ஈன்ற பெருமாட்டி. வறுமையை அகற்ற விரும்புபவர்கள் இத்தலத்து எம்பெருமானை பக்தியுடன் வழிபட்டால் வறுமை அகலுகிறது என்கிற அனுபவம் – இப்போதும் தொடர்கிறது.

| | | |
|---|---|---|
| பெருமாள் மூலவர் | : | நிக்ஷேபவித்தன் (வைத்த மாநிதி) கிழக்கு நோக்கிய கிடந்த கோலம். |
| உத்ஸவர் | : | நித்யபவித்ரன் (நின்ற திருக் கோலம்) |
| தாயார் | : | குமுதவல்லி, கோளூர்வல்லி, பல்லவல்லி நாச்சியார். |
| விமாநம் | : | ஸ்ரீகரவிமாநம் |
| தீர்த்தம் | : | குபேர தீர்த்தம், நிதித்தீர்த்தம், தாமிரவருணி. |
| ப்ரத்யக்ஷம் | : | குபேரன், நவநிதிகள், மதுரகவி ஆழ்வார். |
| ஆகமம் | : | வைகானஸம் |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார் |

### விசேஷம் :

"கண்ணிநுண் சிறுத்தாம்பு" அருளி வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் அருளுக்கு முழுவதும் பாத்ரமான மதுரகவிகள் அவதரித்த திருத்தலம். குரு கிரகத்துக்கு – பரிகார ஸ்தலம்.

### த்யானச்லோகம் :

*"பைசுந்யோக்தி புரே புஜங்க சயதோ, நிக்ஷே பதாதா*
*ஹரி :*
*தேவீ பல்லவ நாயகீஸசேர : ஸ்ரீதாம் ரபர்ணீ தடே/*
*க்யாதே ஸ்ரீகர நாம்நி திவ்ய நகரே ராஜத்விமாநோத்தமே,*
*வித்தா தீச்வா வாஞ்சித ப்ரதவிபுத் சித்தேஸ்துமே*
*ப்ராங்முக:||"*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

### பாசுரம்

*"உண்ணும் சோறு பருகு நீர் தின்னும்*
*வெற்றிலையுமெல்லாம்*
*கண்ணன் எம்பெருமான் என்று என்றே கண்கள்*
*நீர்(கள்)மல்கி*
*மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்க அவன் ஊர் வினவி*
*திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே"*

– நம்மாழ்வார்

*"பிறப்பு அற்று மூப்புப் பிணி அற்று நாளும்*
*இறப்பு அற்று வாழ இருப்பீர் - புறப்பற்றுத்*

## சாஸ்த்திர நீதிகள்–83

தீர்க்க ச்ருங்க மநத்வாஹம் நிர் லஜ்ஜாம் விதவாம் ஸ்திரியாம் |
சூத்ர மக்ஷர சம்யுக்தம் தூரத: பரி வர்ஜயேது ||

1. நீண்ட கொம்புகள் உடைய மாடுகளை கண்டதும் விலகி செல்ல வேண்டும்.
2. வெட்கமற்ற விதவை பெண்ணிடம் விலகி விட வேண்டும்.
3. படித்த இதர பண்டிதனிடம் விலகியே இருத்தல் வேண்டும். அப்படியிருந்தால் நமது மரியாதை காப்பாற்றப்படும்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



தள்ளுங்கோள்; ஊர் அரவில் தாமோதரன் பள்ளி
கொள்ளும் கோளூர் மருவுங்கோள்"

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

### நாமாக்கள்

471. ஓம் வத்ஸர: நம:
(எங்கும் பரந்துள்ளவனே)
ஓம் தமோபஹாராயை நம:
(அஞ்ஞான இருளைப் போக்குபவளே)

472. ஓம் வத்ஸல: நம:
(பக்தப்பிரியனே)
ஓம் அவ்யய நிதயே நம:
(சிறிதும் குறையாது வளர்ந்து கொண்டே இருக்கும் மாநிதியே)

473. ஓம் வத்ஸீ நம:
(ஜீவர்களிடம், வாத்ஸத்யம் உள்ளவனே (கன்றுகளைக் காப்பதைப் போல))
ஓம் லக்ஷ்ணாயை நம:
(செம்பஞ்சுக் குழம்பாலான பாத விலச்சனை உடையவளே)

474. ஓம் ரத்ன கர்ப்ப: நம:
(விரும்புவோர்க்கு விரும்பியதை எல்லாம் கொடுக்கும் செழிப்பு உள்ளவனே)
ஓம் ஹ்ருதயங்கமாயை நம:
(அடியவர் மனத்துக்கு மகிழ்ச்சி அளிப்பவளே)

475. ஓம் தநேஸ்வர: நம:
(விரும்புவோர்க்கு உடனே கொடுப்பவனே)
ஓம் ம்ருதஸஞ்சீவிந்யை நம:
(சம்ஸாரதாபத்தால் உயிர் இழந்தவர்க்கு அருள் நோக்கினால் வாழ்வு அளிப்பவளே)

476. ஓம் தர்மகுப் நம:
(பொருள், இன்பம் இவை தீய வழியில் செல்லாமல் தடுத்துத் தர்மத்தைக் காப்பவனே)
ஓம் சுப்ராயை நம:
(எவ்வித அழுக்கும் இல்லாதவளே)

477. ஓம் தர்ம க்ருத் நம:
(எல்லாரையும் தர்மிஷ்டர்களாக ஆக்கும் சங்கல்பம் உள்ளவனே)
ஓம் சந்த்ரிகாயை நம:
(மகிழ்ச்சி ஒன்றையே தருபவளே)

478. ஓம் தர்மீ நம:
(சிறந்த தர்மமும், சாதாரண தர்மமும் ஆகக் கொண்டவனே)
ஓம் ஸர்வதோமுக்யை நம:
(அடியார்க்கு எல்லாத் துறைகளிலும் பெருமை அளிப்பவளே)

479. ஓம் ஸத் நம:
("ஸத்" எனப் புகழப்படுபவனே)
ஓம் ஸர்வோத்தமாயை நம:
(பாவிகளிடமும் கருணை உள்ளவளே)

480. ஓம் அக்ஷரஸத் நம:
(அழிதலும், குறைதலும் இல்லாத, இருக்கும் பொருள் ஆனவனே)
ஓம் மித்ரவிந்தாயை நம:
(தம் அடியார்களை மித்ரர்கள் போல் நினைப்பவளே)

ஸ்ரீமதே கோளூர்வல்லி (குமுதவல்லீ) நாயிகா ஸமேத ஸ்ரீநிக்ஷேபவித்தாய பரப்ரஹ்மணே நம:

குறிப்பு : ஸ்ரீவைகுண்டத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தாமிரவருணி தென்கரையில் இவ்வாலயம் உள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. வைகுண்ட பிராப்தி.
2. மஹா விஷ்ணு.
3. துவாரகை.
4. இராஜ்ய நிர்வாகம், சகோதரர்களின் ஒற்றுமை மற்றும் நட்பு.
5. கிருஷ்ண பரமாத்மாவே நம் வீட்டில் இருப்பதற்கான பலன்.
6. பிரளயத்திலிருந்து.
7. பரிக்ஷித் மஹாராஜா.
8. ஜனமே ஜயன்.
9. 1) சுதபா - வ்ருஷ்னி, 2) கஷ்யபா - அதிதி தேவி, 3) வசுதேவா - தேவகி.
10. ஸ்ரீஹரியான ஸ்ரீகிருஷ்ணாரிடம்.

தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி

# சுமந்து மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு...

முனைவர் எம்.எஸ். வேங்கடாசாரி,
காட்டுமன்னார்கோயில்,
94446 49304



**நீர் சுமந்து :**

வானவர்கள், பெருமாள் திருவாராதனத்துக்கு நீரைத் தலையில் சுமந்து வந்தனர். திருமலையில் திருவேங்கடவனுக்கு இடமளித்த வராகப் பெருமாள் பூமிப்பிராட்டிக்குக் கூறியவற்றுள், பெருமாளுக்கு நீர் முகந்து வந்து சமர்ப்பித்தலின் சிறப்பை வராக புராணத்தில் அருளிச் செய்துள்ளார். அச்சுலோகங்கள் வருமாறு...

*"ஸ்நாநபாநோ பலேயார்த்தம் ஸலிலம்யோத தாதிமே*
*தஸ்ய புண்ய மஹாபாகே ச்ருணு தத்வேந நிஷ்கலம் ।*
*யாவந்தோ பிந்தவக்கேசித், பாநீயஸ்ய வஸுந்தரே*
*தாவத் வர்ஷ ஸஹஸ்ராணி, க்ரௌஞ்சத்வீபே மஹீயதே ॥'*

*"க்ரௌஞ்சத்வீபாத் பரிப்ரஷ்டோ, ஸர்வகர்ம பராயண:।*
*ஸர்வ ஸங்க பரித்யக்தோ மமலோகஞ்ச கச்சதி ॥"*

**கருத்து :**

பெருமாளுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்பவன் அவன் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு துளி தீர்த்தத்துக்கும் ஆயிரம் ஆண்டுகள் கிரௌஞ்சத்வீபத்தில் சிறந்த வாழ்க்கை வாழ்ந்து, புண்ணிய பலன் முடிந்தபின் மீண்டும் பிறந்து (பூமியில்), எல்லா நற்செயல்களையும் புரிந்து அவற்றின் பலனையும் துறந்து பகவானுடைய லோகம் அடைவான்.

தற்காலத்தில், பெருமாளுக்கு ஆகாச கங்கையிலிருந்து தீர்த்தத்தைச் சுமந்து வந்து சமர்ப்பிக்கும் பேறு பெற்ற திருமலை நம்பி திருவம்சத்தினர் அக்கைங்கர்யத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

**சுடர் தூபம் கொண்டு :**

ஆழ்வார்களைப் "பேசிற்றே பேசும் ஏக கண்டர்கள்" என்பர். நம்மாழ்வாருக்கு முன்னர் பொய்கையாழ்வாரும் திருமழிசையாழ்வாரும் எப்படி அனுபவித்தனர் என்பதை இப்பகுதியில் காணலாம். பெருமாள் திருவாராதனத்துக்கு (தோ(ள்) மாலை சேவைக்கு) தீபம் தூபம் முதலானவற்றை வானவர்கள் சுமந்து வருகின்ற நிகழ்வை நம்மாழ்வார் குறிப்பிடுகிறார்.

இப்பாசுரத்துக்கு முன்னோடியாக அமைந்த பொய்கையாழ்வார் பாசுரம் காணத்தக்கதாகிறது. அப்பாசுரம் வருமாறு :

*"படையாரும் வாட் கண்ணார் பாரசிநாள் பைம்பூந்*
*தொடைய லோடேந்திய தூபம் - இடையிடையில்*
*மீன்மாய மாசூணும் வேங்கடமே மேலொருநாள்*
*மான்மாய வெய்தான் வரை"*

–முதல் திரு. 82.

**கருத்து :**

முன்னொரு காலத்தில் ஸ்ரீராமனாக இருந்த பொழுது மாயமானான மாரீசனைக் கொன்று பின் அவன் வசிக்கும் திருமலையில், கூரிய ஒளி பொருந்திய கண்களையுடைய பெண்கள் துவாதசியன்று (பாரசி நாளில்) பசிய வாடாத மலர்களைக் கொண்டு தொடுத்த மாலையோடு, திருவேங்கடவனுக்கு சமர்ப்பிக்கக் கொண்டு வந்துள்ள தூபம் தரும் புகை ஆகாயத்தில் நிறைந்து விண்மீன்கள் மறையுமளவுக்கு மாசு ஏறும்படி நிறையும் திருவேங்கடமலையாகும். இப்பாடலில் துவாதசியன்று திருவேங்கடவனை வணங்கவரும்

நிகழ்வு கூறப் பெற்றுள்ளது. பூரி ஜகந்நாதனை இராஜ குமாரன் வணங்கச் சென்ற நாள் துவாதசி என்று கூறப் பெற்றுள்ளது.

இதனால் திருமால் வணக்கம் துவாதசி நாளில் செய்தல் சிறந்தது என்று புலனாகிறது. துவாதசி திதியும் விஷ்ணுவுக்கு உரியதாகும். இப்பாடலில் "துவா தசி" "பாரசி" என்று குறிக்கப் பெற்றுள்ளது. தற்போது இந்தியில் "பாரஹ்" என்னும் சொல் பன்னி ரெண்டைக் குறிக்கும். துவாதசியும் பன்னிரண்டாம் நாளைக் குறிக்கும். பொய்கையாழ்வாரைப் பின்பற்றி பன்னிரெண்டைக் குறிக்கும் சொல்லாக இந்தியில் "பாரஹ்" அமைந்துள்ளமை வியப்பைத் தருகிறது.

பொய்கையாழ்வார் தம் முதல் திருவந் தாதியில் **''தொழுது மலர் கொண்டு தூபம் கையேந்தி எழுதும் எழுவாழி நெஞ்சே!''** (முதல் திரு.58) என்று தம் நெஞ்சை நோக்கிக் கூறுகிறார் என்பதும் காணத்தக்கது.

முற்றும்.







# திருமலையில் நட்சத்திர உத்ஸவம்!

**திருவோணம் நட்சத்திரம் :**

திருமலையப்ப ஸ்வாமி திருநட்சத்திரம். ஸ்வாமி மற்றும் உபயநாச்சிமார் களுடன் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறும். திருமலையப்ப ஸ்வாமிக்கு பிரம்மோத் ஸவமும், புஷ்பயாகமும் இந்நட்சத்திரத்தின் அடிப்படையிலேயே அமையும்.

**ரோஹிணி நட்சத்திரம் :**

ஸ்ரீகிருஷ்ணனின் திருநட்சத்திரமான ரோஹிணி நட்சத்திரம் அன்று காலையில் சுப்ரபாதம் நடைபெற்ற பின்னர் போக சீனிவாச மூர்த்தியோடு தாயாருடன் ஸ்ரீகிருஷ்ணருக்கும் அபிஷேகம் நடைபெறும். அன்று மாலை சஹஸ்ர தீபலாங்கார சேவையும், திருவீதி உலாவும் நடைபெறும்.

**திருவாதிரை நட்சத்திரம் :**

பகவத் ராமாநுஜரின் ஜன்ம நட்சத்திரம். ஆகையால் அன்று மாலை சஹஸ்ர தீபலங்கார சேவை ஆன பின்னர் உபய நாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமி இராமாநுஜரின் பீடம் ஏறி மரியாதை செய்வார். இராமாநுஜரின் திருநட்சத்திரத்தை முன்னிட்டு 10 நாட்கள் முன்னரே பாஷ்யகாரார் உத்ஸவம் நடைபெறும். அங்கு ஸ்வாமிக்கு நைவேத்தியம் நடைபெற்று ஸ்வாமி மாலை இராமாநுஜருக்கு சாற்றப்படும். ஸ்வாமியின் சேஷ ஆரத்தியும் கொடுக்கப்படும்.


**புனர்பூசம் நட்சத்திரம் :**

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருநட்சத்திரம். சுப்ரபாதம் சீதா ராம லக்ஷ்மணருக்கும் அபிஷேகம், சஹஸ்ர தீபலங்கார சேவை நடைபெறும். ஸ்ரீராமநவமி அன்று மட்டும் சீதாராம லக்ஷ்மண ஸ்வாமி தங்க வாயில் முன்னர் எழுந்தருள வைத்து, ஆஸ்தானம் நடைபெறும். இராமநவமி அடுத்து வரும் தசமி (சித்திரை மாதம் சுக்லபக்ஷ தசமி) அன்று காலையில் அபிஷேகம் நடைபெறுவதுடன் அன்று மாலை சஹஸ்ர தீபலங்கார சேவையில் ஸ்ரீராம லக்ஷ்மண சீதா தேவியுடன் ஆஞ்சநேய ஸ்வாமியும் திருவீதி உலா வருவர். அன்று மாலை தங்கவாயில் முன்பு பீடத்தில் எழுந்தருள வைத்து, ஸ்ரீராம சரித்திரம் என்ற புராணக்கதையை பாராயணம் செய்து, நைவேத்தியம் மற்றும் மங்கள ஆரத்தியும் நடைபெறும்.

**ஆதாரம் : ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி உத்ஸவங்கள் (தெலுங்கு)**

# அன்னமய்யா வாழ்க்கை வரலாறு

தெலுங்கு மூலம்: டாக்டர். மன்னூரு சிவப்ரவீண்
தமிழாக்கம்:திருமதி ராதாராமநாதன், 93936 09240



**சங்கீர்த்தன யக்ஞம் :**

ஸ்வாமிக்குத் தான் சமர்ப்பிக்கும் கைங்கர்யங்களே தனது போகம் என்ற பாவனையிலேயே வாழ்ந்து வந்தார் அன்னமய்யா. வால்மீகி இராமாயணத்தின் முக்கியமான கட்டங்களை தன் சங்கீர்த்தனங்கள் இடையே வைத்துப் பாடினார். அந்த கானாம்ருதத்தைக் கேட்ட அனைவரும் அன்னமய்யாவை தும்புருவரோ, நாரதரோ இல்லை கந்தர்வனாகவோ இருக்க வேண்டும் என்று கருதினர். இவர் ஒரு சாதாரண மனிதரேயல்ல என்று புகழ்ந்தும் வந்தனர்.



**சாளுவ நரசிம்மர் :**

தாள்ளபாக்கத்தின் அருகிலுள்ள டங்கடூரு என்ற பட்டணத்திற்கு அரசரான சங்கம வம்சத்தின் பிரதிநிதியான சாளுவ நரசிம்மராயர், அன்னமய்யாவின் கானாம்ருதத்தை குறித்து அறிந்து அத்தகைய மகானைக் காண வேண்டும் என்ற உற்சாகத்துடன் அன்னமய்யா இருக்குமிடம் தேடி வந்து, அவரை கௌரவப்படுத்தும் வகையில் பரிசுகள் அளித்து வணங்கினார். தன்னுடன் வந்து, தன் ஆஸ்தான வித்வானாக அமர்ந்து தன்னை கௌரவப்படுத்த வேண்டும் என்று வேண்டி நின்றார். வைஷ்ணவ பக்தனின் வேண்டுகோளை நாம் தட்டக் கூடாது, நிறைவேற்ற வேண்டுமென்று கருதி அதற்கு ஒப்புக் கொண்டு, நரசிம்மராயர் ஏற்பாடு செய்திருந்த பல்லக்கில் ஏறி டங்கடூரு வந்தடைந்தார். அங்குள்ள சென்னகேசவ ஸ்வாமி கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து கொண்டு, ஆலயத்தின் மாடவீதிகளில் வலம் வந்தார். அன்று முதல் நரசிம்மராயர் அன்னமய்யாவை தன் நன்மையே கோரும் நண்பனாக, குருவாக, தனது சொந்தமாக பாவித்து கௌரவித்தார். எந்த வேலையை ஆரம்பித்தாலும் அன்னமய்யாவிற்கு தெரிவித்து விட்டுத்தான் செய்வாராம். அவரது ஆசிர்வாத பலத்தால் நரசிம்மராயர் பெனுகொண்டாவை ஆட்சி புரிந்தார். அந்நகரத்துக்கு அவரை வரவழைத்து அங்கு ஸ்ரீவேங்கடேசுவர பக்தி கீர்த்தனைகளைப் பாடி தன்னை மகிழ்விக்க வேண்டுமெனக் கேட்டார். அப்போது ஒருநாள், *''ஏமொகோ சிகுருடதர முன எடநெட கஸ்தூரி நிண்டெனு''* (5. 82) என்ற மதுர பக்தி பாவத்துடன் கூடிய சிருங்கார சங்கீர்த்தனத்தைப் பாடினார். “சுத்தமான தேனைப் போன்று, தெளிந்த கருப்பஞ்சாற்றைப் போன்று, குளிர்ந்த தென்றல் காற்றைப் போன்று, கற்பூர வாசனை போன்று காதுகளில் அமிர்தத் தாரையாக பாய்ந்த அந்த சங்கீர்த்தனங்கள் பாலேடு போன்று தூய்மையாக புலன்களுக்கு விருந்தளித்தன. இதைக் கேட்டு நரசிம்மராயர் சொக்கிப் போனார். ஆஹா! ஓஹோ! அற்புதம்!” என்று பலவாறாகப் பாராட்டி பல பரிசுகளும் அளித்தார். அதுமுதல் நரசிம்மராயர்

அன்னமய்யாவின் திருமலையப்பன் பக்திப் பாடல்களைக் கேட்டு மகிழ்வார்.

ஒரு நாள் நரசிம்மராயர் அரசன் என்ற அகம்பாவம் மேலிட, வேங்கடவனைத் துதித்துப் பாடிய அதே சந்தத்தில் அதே அமைப்புடன் தன்னைப் பாட வேண்டுமெனக் கேட்டார். அதைக் கேட்டவுடனேயே, "ஹரி! ஹரி!" என்றவர், "அந்த ஹரியைப் போற்றிப் பாடிய வாயால் வேறொருவரை புகழ்ந்து பாடேன். என்னிடம் இப்படி ஒரு கீழ்த்தரமான வேண்டுகோளை எப்படி விடுத்தாய்? ஸ்ரீநிவாசனை துதித்த வாயால் வேறொருவரைப் பாடுவது என்பது சகோதரியுடன் குடித்தனம் நடத்துவதைப் போன்றது" என்று மிகுந்த கோபத்துடன் மறுத்தார். என் நாவு பரம பதிவ்ரதா எண்ணத்தை உடையது என்றும், ஹரி முகுந்தனையே பாடும். எனக்கு நீயும் வேண்டாம் உன் நட்பும் வேண்டாம் என்ற அன்னமய்யாவின் கூற்றைக்கேட்டு நரசிம்மராயரும் கோபத்துடன் அவரை வலிமையான சங்கிலிகளால் பிணைக்குமாறு ஆணையிட்டார். சேவகர்களுக்கு அப்படிச் செய்ய விருப்பமில்லாது போனாலும் அரசனது ஆணையை நிறைவேற்றுதல் அவர்கள் கடமையாதலால் அதை நிறைவேற்றினர், அப்போது

*"ஆகடி வேளல நலபைன வேளலனு*
*தேகுவ ஹரி நாமமே திக்கு மறிலேது*
*கொறமாலி வுன்ன வேள குலமு செடினவேள*
*செறவடி வொருல சே ஜிக்கின வேள*
*வொறபைன ஹரி நாம மொக்கடே கதிகாக*
*மறசி தப்பினனைனா மறிலேது தெறகு.....*
*.....சங்கேள பெட்டின வேள சம்ப பிலிசினவேள*
*அங்கிலிகா நப்புலவா ராகின வேள*
*வேங்கடேசு நாமமே விடிபிஞ்ச கதிகாக*
*மங்கு புத்தி பொரலின மறிலேது தெறகு!*

*(1–158)*




"கடைசி காலத்திலும், நாம் சோர்ந்து போன நிலையிலும், நம் குலமே குலைந்து போனாலும், சங்கிலிகளால் பிணையுண்டாலும், அடிபட்டாலும் எந்நிலையிலும் வேங்கடேச நாமம் ஒன்றே நம்மை விடுவிக்கும்" என்று பாடினார். இதைப் பாடி முடித்தவுடன் சங்கிலிகள் அற்று விழுந்தன. காவல்காரர்கள் இருதயம் திக்கென்றது. அவர்கள் பயத்துடன் விரைந்தோடி அரசரிடம் சென்று நடந்ததை விவரித்தனர்.

அரசன் நம்பவில்லை. சிரித்தபடி அன்னமய்யாவிடம் வந்து, "சேவகர்களை பயமுறுத்த மாயைகள் செய்கிறாயா. நீ! எத்தனை மாயைகள் செய்தாலும் உன்னை நான் விடுவிக்கப் போவதில்லை என்று கூறி மறுபடியும் சங்கிலிகளைப் பிணைக்கச் செய்தார். முன் பாடிய அதே பாடலை அன்னமய்யா உருக்கத்துடன் பாடினார், அதை பாடி முடித்தவுடன், பல்லாயிரம் ஆணிகளால் பிணைக்கப்பட்ட அந்த சங்கிலி மறுபடியும் இற்று விழுந்தது. இந்த முறை அரசனும் பயந்தான். அவர் கால்களில் விழுந்தான்.

கண்ணீர் பெருக, சரசரத்துப் போன குரலில், "குருவே! செய்யக் கூடாத பாபத்தைச் செய்துவிட்டேன். என்னை மன்னியுங்கள், இனி என் வேங்கடேசுவரன் நீங்களே. என் மீது கருணை காட்டுங்கள்" என்று வேண்டி நின்றான். பன்னீரால் அவரது பாதங்களைக் கழுவினான், பல்லக்கில் அமர வைத்துத் தானே அதை சுமந்து சென்றான்.

அவரது குற்ற உணர்வை கவனித்த அன்னமய்யா அவரிடம், "இன்று முதல் ஸ்ரீஹரியைப் பாடும் பாகவதோத்தமர்களை சாதாரண மனிதர்களாக நினைக்காமல் பூஜிக்கத்தக்கவர்களாக பாவித்து நடந்துகொள்" என்றார்.

தொடரும்...



# பகவானின் பெயர் வைப்பதால் என்ன புண்ணியம்?

அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச் செயல்–8

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963



சென்ற இதழில் கோத்ரப்ரவரத்தைப் பற்றியும், அபிவாதனம் பற்றியும் சில செய்திகளைப் பார்த்தோம், வைணவ சமயத்தில் ஒரு மரபு உண்டு, தன்னுடைய ஆசாரியன் பெயரை முன்னிட்டுக் கொண்டு, சுய அறிமுகம் நடக்கும், அப்படிச் சொல்லும்பொழுது அதி லேயே எல்லாம் அடங்கி விடுகின்றது. ஆண்டாள் இதனைக் காட்டித் தருகின்றாள். ஆழ்வார்கள் அனைவருமே தம்மைப் பற்றிய அறி முகத்தை தாம் அருளிய, ஒவ்வொரு பத்து பாடல்களின் கடைசி பாட லில், அதாவது பலன் சொல்லும் பாசுரத்தில், சொல்லும் வழக்கம் உண்டு.

அதில், அவர்கள் அவதரித்த ஊரும், அவர்கள் பேரும் இருக்கும். தம்மைப்பற்றிய முறையான ஒரு அறிமுகம் இருக்கும். தம்மை முறையாக அறிமுகப்படுத்திக்கொள்ளும் முறை, மேல் நாட்டில் தான் உண்டு என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. நம் முன்னோர்கள் பின்பற்றிக்காட்டிய வழியையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆண்டாள் நாச்சியார் இதை மிக அழகாக தம் பாசுரத்தில் காட்டுகின்றார்.

*"வேதவாய்த் தொழிலாளர்கள் வாழ் வில்லிபுத்தூர் மன்*
*விட்டுசித்தன் தன் கோதை வாய்த் தமிழ் வல்லவர்*
*குறைவின்றி வைகுந்தம் சேர்வரே"* என்று ஒரு பாடலில்

அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

*"புதுவையர் கோன் பட்டன் கோதை இன்னிசையால் சொன்ன மாலை ஈரைந்தும் வல்லவர்"* என்று இன்னொரு பாசுரத்தில் அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். *"வேயர் புகழ் வில்லிபுத்தூர் கோன் கோதை சொல்"* என்று இன்னொரு பாசுரத்தில் அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். இதில், தான் அவதரித்த ஊர், அந்த ஊரின் சிறப்பு, தன்னுடைய தந்தையார் திருநாமம் போன்ற செய்திகளை முறையாகச் சொல்வதைக் கவனிக்க வேண்டும். இந்த ஊரைச் சேர்ந்த, இன்னாருடைய மகளான நான், என்று சொல்லும் போதே, அபிவாதனம், பிரவரம் எல்லாம் வந்து விடுவதை நாம் பார்க்கிறோம். இதுதான் நாம் அபிவாதனம் செய்து கொள்ளும் முறையும் கூட.

கம்பனில் அழகான இடம். இராம பிரானை அனுமன் முதல் முதலாகச் சந்திக்கக்கூடிய காட்சி. இராமனும் இலக் குவனும் வனத்தில் தனியே இருப்பதைக் கண்டவுடன் உங்கள் வரவு நல்வரவா கட்டும் என்று அனுமன் சொல்லுகின்றான். இதில் இன்னுமொரு நுட்பத்தையும் நாம் கவனிக்கலாம். ஒருவரை நம்முடைய வீட்டில் வரவேற்கின்ற போது, அவரு டைய வரவு, அவருக்கும் நமக்கும் நன்மை தரக்கூடியதாக இருக்க வேண்டும் என்கின்ற எண்ணம் இருவர் மனதிலும் இருக்கும்படியாக, புன்னகையுடன் வர வேற்க வேண்டும். "வாருங்கள்" (ஸ்வா கதம்) "ஏதோ நல்ல காரியமாகத் தான் வந்திருப்பீர்கள், உங்கள் வரவு நன்மை யாக இருக்கட்டும்" என்று சொல்லி வரவேற்கும் பொழுது மங்களகரமாக இருக்கும்.

அதனால்தான் வீட்டு வரவேற் பறையில் "நல்வரவு" என்கிற ஒரு பலகை யையும் எழுதி வைக்கிறோம். திருமண



மண்டபங்களில் "நல்வரவு" என்று ஒளி விளக்கு அழைப்புப் பலகையை பலருக்கும் தெரியும் படியாக வைக்கிறோம். இது ஒரு நேர்மறை சிந்தனை. இதை கம்பன் அனுமன் வாயிலாகக் காட்டுகின்றார்.

*"அவ்விருவரும் எய்தலோடு, செவ் வழி உள்ளத் தானும்,*
*தெரிவுற எதிர் சென்று எய்தி, கவ்வை இன்றாக, நுங்கள் வரவு"*

என, கருணையோனும், *"எவ் வழி நீங்கியோய்? நீ யார்"* என, விளம்பலுற்றான்:

ஐயனே இந்த காட்டுக்கு வந்திருக்கிறீர்கள், உங்கள் வரவு நல்வரவாகட்டும். முதல் வார்த்தையை அனுமன் சொல்லியவுடன் இராமபிரானுக்கு ஏக மகிழ்ச்சி. நீ யார்? என்று கேட்கிறார். அப்பொழுது அனுமன் இராமபிரானைப் புகழ்ந்துவிட்டு தன்னைப் பற்றி சொல்லுகின்றார்.

*"மஞ்சு எனத் திரண்ட கோல மேனிய! மகளிர்க்கு எல்லாம்*
*நஞ்சு எனத் தகைய ஆகி, நளிர் இரும் பனிக்குத் தேம்பாக்*
*கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின் வேந்தற்கு*
*அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அனுமன் என்பேன்"*

தந்தையார் வாயுதேவன், தாயார் அஞ்சனை, தன்னுடைய பெயர் அனுமன். இத்தனை விபரத்தையும், குழப்பமின்றி, ஒரே வரியில் பூரணமாக சொல்வதைப் பார்க்கிறோம். அபிவாதனம் செய்கின்ற முறை இதுதான். நம்மைப்பற்றிச் சரியாகவும் தெளிவாகவும் அறிமுகப்படுத்திக்கொண்டு பேசுவதன் மூலமாக, மற்றவர்களிடத்தில் "அன்பான இணக்கமான" இருவருக்கும் நன்மை தரக்கூடிய உறவுகளை வளர்த்துக் கொள்கின்றோம். அபிவாதனம் செய்துகொள்வதன் நோக்கம் இதுதான்.

கன்யாதான மந்திரத்தில் மணமக்கள் பற்றிய கோத்திரப் ப்ரவரத்தோடு, குலமுறை, ஊர் எல்லாவற்றையும் சொல்கிறோம். வந்திருக்கும் சபையோர், இருவருடைய குல முறை, இருவர் குலத்திலும் இருக்கக்கூடிய முன்னோர்கள் பெயர்கள், இவற்றைப் பூரணமாகத் தெரிந்து கொள்கிறார்கள். இதில் இன்னொரு நுட்பமும் உண்டு. அக்காலத்தில் குழந்தைக்குப் பெயர் வைக்கின்றபோது, மூன்று தலைமுறையைச் சேர்ந்த, அவர்களுடைய முன்னோர் பெயர்களையே வைத்துக் கொண்டே வருவார்கள். வைணவ மரபிலே பகவானின் பெயரையோ (ஆண் குழந்தையாக இருந்தால்), பிராட்டியின் பெயரையோ (பெண் பிள்ளையாக இருந்தால்) அல்லது ஆழ்வார் ஆசாரியருடைய பெயரையோ, ஆண்டாள் பெயரையோ வைக்க வேண்டும். எப்படி பெயர் வைக்க வேண்டும் என்பதை பெரியாழ்வார் பாசுரம் மூலம் அறியலாம்.

*"ஊத்தைக்குழியில் அமுதம் பாய்வதுபோல் உங்கள்*
*மூத்திரப்பிள்ளையை என் முகில்வண்ணன் பேர் இட்டு*
*கோத்துக் குழைத்துக் குணாலம்ஆடித் திரிமினோ*
*நாத்தகு நாரணன் தம் அன்னை நரகம்புகாள்".*

நாம் பெயர் வைக்கின்ற பொழுது, இந்த உடம்புக்குத் தான் பெயர் வைக்கின்றோம். இந்த உடம்புக்குள் இருக்கக்கூடிய ஆத்மாவுக்கு கிடையாது. கெடும் உடம்புக்கு கெடாத பெயர் வைத்து அழைப்பதால், நமக்கு இம்மை மறுமைப் பயன்கள் கிடைக்கும். நரக வாசம் கிடைக்காது. எனவே, பகவான் பெயராகப் பார்த்து இடுங்கள். குழந்தையை அழைத்த மாதிரியும் ஆகும். ஒவ்வொரு முறை குழந்தையை அழைக்கும் பொழுதும் பகவானை அழைத்த புண்ணியமும் சேரும்.

இதுதான் நம்முடைய மரபில் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வந்தது. நம்முடைய பெற்றோர்களுக்கும் அவர்கள் பெற்றோர்க்கும் பகவானுடைய பெயரையே வழிவழியாக இட்டு வந்ததால், நம்மைப்பற்றி அபிவாதனம் செய்யும் பொழுதும், அல்லது மற்றவர்கள் நம்முடைய பெயரை சொல்லுகின்ற பொழுதும், பகவானுடைய திருநாமத்தைச் சொன்ன புண்ணியமும் கேட்ட புண்ணியமும், சொல்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் கிடைக்கும். இப்படியான ஒரு அற்புதமான ஏற்பாட்டை நம்முடைய முன்னோர்கள் செய்து வைத்திருந்தார்கள்.

இந்த அடிப்படையில் பார்த்தால் கன்யாதானத்தில் கோத்ரபிரவரம் சொல்கின்ற போது ரிஷிகளின் பெயரைச் சொன்ன புண்ணியமும், பகவான், பிராட்டி பெயரைச் சொன்ன புண்ணியமும், மணமக்களை மகாவிஷ்ணுவாகவும், மகாலக்ஷ்மியாகவும் நினைத்த புண்ணியமும் கிடைக்கின்றதே. இனி திருமண வைபவத்தில் நடக்கக்கூடிய நிகழ்வுகளை மேலும் தெரிந்து கொள்வோம்.

அருளிச்செயல் தொடரும்...

ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

தொடர் கதை

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## பிரகலாதனின் திவ்விய மகிமைகள்




தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443


*சென்ற இதழ் தொடர்ச்சி...*

குருபுத்திரர்களான சண்டன், அமர்க்கண் இவர்களின் வார்த்தைகளைக் கேட்டப் பின்பு இரண்யகசிபு ஓரளவு மனம் சமாதானம் அடைந்தான். தன்பிள்ளை ஹரி பக்தியை விடுத்து மீண்டும் தன்வழிக்கு வருவான் என்ற நம்பிக்கை அவனிடத்தில் துளிர்விட்டது. இனி, பிரகலாதனுக்கு இல்லறத்தில் இருக்கும் அரசர்களுடைய தர்மங்களை மட்டும் போதிக்கும்படி குருபுத்திரர்களிடம் கூறினான். அப்படியே ஆகட்டும் என்று கூறி குருபுத்திரர்கள் பிரகலாதனை தங்கள் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றனர். இம்முறை குருபுத்திரர்கள் மிகவும் நிதானமாக நல்ல முறையில் பிரகலாதனுக்குக் கல்வி கற்பிக்க முயற்சி செய்தனர். அறம், பொருள், இன்பம் பற்றியே தொடர்ந்து போதித்து அவன் மனத்தை மாற்ற தீவிரமாக முயன்றனர். முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவனான பிரகலாதனுக்கு இவை பிடிக்குமா? எனவே தன் மனதுக்குப் பிடிக்காத அப்போதனைகளை அவன் விரும்பவில்லை. ஒருசமயம் குருமார்கள் தங்கள் வேலை நிமித்தம் வெளியில் சென்றனர். அப்பொழுது அங்குப் படிக்கும் அசுரச் சிறுவர்கள் தங்களுடன் விளையாட வரும்படி பிரகலாதனை அழைத்தனர். உண்மையான பக்தர்களுக்கு இறைவனின் கதைகளை பிறருக்கு எடுத்துச் சொல்வதும், இறைவனின் நாமத்தை உச்சரிக்கச் செய்து கேட்பதிலும் மட்டுமே நாட்டம் இருக்கும். அப்படிப்பட்ட பக்தர்களே இறைவனுக்கு நெருக்கமானவர்களாக இருப்பார்கள். அசுரக் குழந்தைகள் பிரகலாதனை விளையாட அழைத்ததும், அச்சுதனையே தன் இதய சிம்மாசனத்தில் இருத்தியிருந்த பிரகலாதன் அப்பிள்ளைகளைப் பகவத் பக்தியில் ஈடுபட செய்ய வேண்டும் என்று விரும்பினான். அவ்வாறே அவர்களுக்கு ஞானத்தையும் பக்தியையும் உபதேசிக்கத் தொடங்கினான்.

“நண்பர்களே! அறிவுள்ளவர்கள் செய்யத்தக்க செயல் என்னவென்றால் காமம், மோகம் இவற்றிற்கு ஆட்படாமல் பாகவத தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்வதேயாகும். மனிதப்பிறவியும் மற்ற பிறவிகளைப் போன்றதே. ஆயினும், பக்தி யோகம் போன்றவற்றைச் செய்வதற்கு மிகவும் உரியதாகும். இந்த மானிடப் பிறவியில் மனித ஆயுள் நூறு ஆண்டுகள் மட்டுமே. இந்த நூறு ஆண்டுகளில் சரிபாதி பாகம் தூக்கத்தில் கழிந்து போகிறது. எனவே, உண்மையில் பார்க்கும் போது மனித ஆயுள் என்பது ஐம்பது வருடங்கள் மட்டுமே. அதிலும் முதல் பத்து வருடங்கள் இளமைப் பருவத்திலும், அடுத்த பத்து வருடங்கள் விளையாட்டிலேயும் கழிந்து போகிறது. பின்னர், சுமார் இருபது ஆண்டுகளும் முதுமைப்பிடியில் சிக்குண்டு எதையும் செய்யும் சக்தி அற்றவனாகின்றான். இருக்கும் சொற்ப ஆயுளில் காமம், மோகம் இவற்றிற்கு ஆட்பட்டு காலத்தைக் கழித்து விடுகிறான்.

எனவே புலனடக்கம் இல்லாத மனிதன் தன்னைத்தானே எவ்வாறு முக்தனாக்கிக் கொள்ள முடியும்? இல்லறத்தில் இருப்பவர்கள் உறவு எனும் பாசத்தால் கட்டுண்டு கிடப்பார்கள். பணம் என்பது தேனைக் காட்டிலும் இனிமையானது. பணத்திற்காக வேண்டி மனிதன் தன் உயிரையும் பணையம் வைக்கிறான். நண்பர்களே! அசுரக் குழந்தைகளே! உண்மையில் பகவத் பக்தி ஒன்றே அனைவரையும் காக்கக் கூடியது. பகவத் பக்தி இல்லாத வர்களையே அசுரர்கள் என அழைக்கப்படுகிறார்கள். எனவே, நீங்கள் அசுரப் பிள்ளைகளாய் இருந்தாலும் அவர்களிடமிருந்து நீங்கள் விலகியே இருங்கள். நாராயணனே நமக்குக் கதி என்று அவனிடம் பக்தி செலுத்துங்கள். விஷ்ணுவின் பாதார விந்தங்களைச் சரணமடைவதே திவ்வியமானதாகும் என நான் நினைக்கி றேன். ஆனால், நாரதரைப் போன்ற சாதுபுருஷர்களின் கருணையில்லாமல் இப்படிப்பட்ட திவ்வியஞானம் நமக்கு புரியாது. நானும் இந்த ஞானத்தை அந்த மகாபுருஷரிடமிருந்து கேட்டுப் பெற்றேன்.

பிரகலாதன் இவ்வாறு கூறியவுடன் அரசுப் பிள்ளை களுக்குச் சில ஐயப்பாடுகள் தோன்றின. அவர்கள் தங்கள் ஐயப்பாடுகளை எந்தவொரு ஒளிவு மறைவு மின்றி வெளிப்படுத்தினார்கள். “பிரகலாதா? நமக்கு நம் குருமார்களைத்தவிர எவரையும் அறியோம்! அதுமட்டு மின்றி நாம் அனைவரும் குழந்தைகள். மேலும், குருமார்களின் கட்டுப்பாட்டில்தான் நாம் இருக்கின் றோம். அப்படியிருக்க, அந்தப்புரத்தில் வசிக்கும் உனக்கு மகாத்மாக்களோடு தொடர்பு கொண்டு பேசு வதற்கு வாய்ப்பு உண்டா! பெருமைக்குரியவனே! இச்சூழலில் நீ நாரதமுனிவர் வாயிலாக இந்த திவ்விய ஞானத்தை எவ்வாறு கேட்டுப் பெற முடிந்தது. இந்த ஐயத்தை நீ எங்களுக்கு விளங்கக் கூறி விலக்குவாயாக” என மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டனர்.

அசுரப்பிள்ளைகள் அவ்வாறு கேட்டதும், பிரகலாதன் தன் குருவான நாரத முனிகள் போதித்த உபதேசங்களை நினைத்தவாறு நடந்த கதையைச் சொல்லத் தொடங்கினான். பிள்ளைகளும் கேட்கத் தயாரானார்கள். பிரகலாதன் தேனினும் இனிய வார்த்தைகளால் சொல்ல ஆரம்பித்தான். “ஒரு சமயம் என் தந்தை பெரிய வரங்களைப் பெறும் பொருட்டு மந்திர மலைக்குத் தவம் செய்வதற்குச் சென்றார். அத்தருணத்தை நல்ல வாய்ப்பாகக் கருதி இந்திரன் முதலான தேவர்கள் அசுரர்கள் மீது படையெடுத்து வந்தனர். தேவர்கள் தாக்குதலை அசுரர்களால் தாங்க முடியவில்லை. தேவர்களை எதிர்த்து போரிடமுடியாமல் அசுரர்கள் எல்லோரும் பயந்து சிதறி ஓடி ஒளிந்தனர். அப்பொழுது தேவர்கள் எங்கள் அரண்மனையை முற்றுகையிட்டு அனைத்து பொருட்களையும் கொள் ளையடித்தனர். மேலும், தேவேந்திரன் என் தாயைச் சிறைப்பிடித்தான். என் தாய் துடிதுடித்துப்போனார். இருந்தும் இந்திரன் என் தாயைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றான். அந்த நேரம் எதிரே வந்த நாரத முனி, இந்திரனைப் பார்த்து எதற்காக இப்பெண்ணை இவ்விதமாக அழைத்துச் செல்கிறாய் எனக்கேட்டார்.”

அதைக்கேட்ட இந்திரன் “இவள் இரண்யகசிபுவின் பத்தினி. தற்போது கருவுற்றிருக்கிறாள். இவளுக்குப் பிறக்கப் போகும் பிள்ளை இரண்யகசிபுவைவிட கொடுமையுடையவனாக இருப்பான். எனவே இவள் பிரசவகாலம் முடியும்வரை என்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பேன். பிறகு இவளை விட்டுவிடுகிறேன். இவள் பெற்ற பிள்ளையை நான் கொன்று விடுகின்றேன் என்றான். அதற்கு மகரிஷி நாரதர் “அவள் கர்ப்பத்தில் வளர்ந்து வரும் பிள்ளையானவன் மகாவிஷ்ணுவின் பரம பாகவதன் ஆவான். அவனை உன்னால் கொல்ல முடியாது என்ற உண்மையை இந்திரனுக்கு விளக்கிக் கூறினார். அதைக் கேட்ட இந்திரன் தான் செய்த தவறை உணர்ந்து நாரத முனிவரை வணங்கினார். மேலும், பரம பக்தனான நான் என் தாயின் கர்ப்பத்தில் இருந்த காரணத்தினால், என் தாயாரை வலம் வந்து வணங்கி னான். பின்பு என் தாயை நாரத முனிவரிடம் ஒப்படைத்து விட்டு அவர் சொர்க்கத்திற்குச் சென்றார்.

“அதன் பின்னர் நாரதர் என் தாயை அவர் ஆசிரமத் திற்கு அழைத்துச் சென்று அடைக்கலம் தந்தார். மேலும், உன் கணவர் வரும்வரையில் இங்கேயே தங்கலாம் உனக்கு எந்தவொரு குறையும் உண்டாகாது என என் தாய்க்கு ஆறுதல் மொழிக் கூறினார். அதைக் கேட்ட என்தாய் அவரை மிகவும் பக்தியோடு வணங்கி அங்கு இருப்பதற்கு சம்மதித்தார். தாயாரின் பணிவைக் கண்டு மகிழ்ந்த நாரதமுனி அவருக்குப் பாகவத தர்மத்தை போதித்தார். அச்சமயம் என் தாயின் கர்ப்பத்திலிருந்த நானும் அந்த உபதேசத்தைக் கேட்டேன். நாரதமுனிவர் கூறிய பாகவத தர்மத்தை என் தாய் மறந்துவிட்டார். ஆனால், நாரத மகரிஷியின் அனுக்கிரக விசேஷத்தினால்



அது எனக்கு மறக்காமல் நினைவில் இருக்கிறது. "நண்பர்களே! என் வார்த்தையில் உங்களுக்கு அக்கறையும் விருப்பமும் இருந்தால், பிள்ளைகளாய் இருப்பினும் நான் சொல்லும் இத்தத்துவம் உங்களுக்கு விளங்கும். அசுரக்குழந்தைகளே ! அனைத்துக்கும் காரண காரியமாக விளங்குகின்ற கோவிந்தனுடைய பாதார விந்தங்களை வணங்கி வருதலே வாழ்க்கையின் குறிக்கோளாகும்" என்றான். பகவானின் அருளைப் பெற்றவனான பிரகலாதனின் உபதேசத்தைக் கேட்ட அசுரக்குழந்தைகளின் மனம் முழுமையாக பக்திமயமானது. அவர்கள் தன் குருமார்கள் செய்த உபதேசத்தைக் காதில் வாங்காமல் காற்றில் விட்டனர். பக்த பிரகலாதனைப் போலவே அவர்களும் ஹரி நாமத்தை உச்சரிக்கவும் அவருடைய திவ்ய குணங்களைப் பாடவும் தொடங்கினர்.

பிரகலாதனோடு சேர்ந்து அசுரக்குழந்தைகளும் பக்தி செய்வதைக் கண்டு குருமார்கள் கவலைக் கொண்டனர். உடனே இரண்யகசிபுவிடம் சென்று இங்குள்ள நிலமையை எடுத்துக் கூறினர். அதைக்கேட்ட இரண்யகசிபுவுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. இனி பிரகலாதனைக் கொல்வதைத் தவிர வேறுவழியில்லை என்ற முடிவுக்கு வந்தான். காலால் மிதிப்பட்ட சர்ப்பம் போல் சீறத் தொடங்கினான். பணிவும் பண்பாடும் நிறைந்த பிரகலாதனைப் பார்த்து "மூடனே! தீயபுத்தி உடையவனே! குல நாசனே! என் கட்டளையை மீறிய உன்னை இன்று நான் கொன்று விடுகின்றேன். நான் கோபப்பட்டால் மூன்றுலகமும் நடுநடுங்கும். அதை நீ நன்கு அறிவாய். இருந்தும் நீ யார் கொடுத்த தைரியத்தில் இவ்வாறு நடந்து கொள்கிறாய்; பயமற்றவனாயும் இருக்கின்றாய். அஞ்சா நெஞ்சம் உடையவனான என் கட்டளையை மீறுகிறாயா?" என்று கர்ஜித்தான்.

பிரகலாதன் "அரசே! என்னுடைய தைரியத்திற்கும் பலத்திற்கும் காரணம் யாரோ அவரே உன் பலத்திற்கும் தைரியத்திற்கும் காரணமானவர் என்று தெரிந்து கொள். உண்மையில் உலகத்தில் உள்ள உயிருள்ள உயிரற்ற அனைத்துக்கும், ஏன் பிரம்மாவோடு எல்லா ஜீவராசிகளுக்கும் அந்த தேவாதி தேவனான விஷ்ணுவே தன்னுடைய சக்தியைக் கொண்டு முத்தொழிலையும் செய்து காத்து வருகிறார். அதனால், தந்தையே! நீ அசுரத் தன்மையை விட்டு விடு. அனைவரிடத்தும் சம நோக்கோடு இரு. மனதைக் காட்டிலும் எதிரி நமக்கு வேறு ஏதுமில்லை. நம் தேகத்தில் உண்டாகும் ஆறு விகாரங்களான விரோதிகளை வெல்லாமல், நாம் அனைத்தையும் வென்று விட்டோம் என்று கூறுபவர்கள் மூடர்களே ! என்று கூறினான்.

அதைக்கேட்ட இரண்யகசிபு மேலும் கோபக் கனலானான் பற்களை நறநறவெனக் கடித்தவாறு "கெட்ட மதியுடையவனே! மூடனே! இந்திரிய அடக்கத்தில் என்னைக் காட்டிலும் சிறந்தவன் போல் பேசுகின்றாய். இது உன் அறிவு அற்றத் தன்மையைக் காட்டுகிறது. உனக்கு மரணக்காலம் நெருங்கி விட்டது. அதனால்தான் நீ இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறாய். மூன்றுலகங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற என்னைக் காட்டிலும் வேறொருவன் இருக்கின்றான் என்கின்றாய். அவன் யார்? அவன் எங்கே இருக்கின்றான்?

அவன் எங்கும் வியாபித்து இருக்கின்றவன் என்றாயே, இத்தூணிலும் இருப்பானா? வீணான கதைகளைப் பேசிவரும் உன் தலையை இப்போதே என் வாளால் வெட்டிவிடுகிறேன்; நீ வணங்கும் அந்த தெய்வம் உன்னை எப்படிக் காப்பாற்றுகிறது என்பதை பார்ப்போம்" என்று கூறியவாறு, வாளை உருவியக் கையோடு சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்தவனாய் தன் கை முஷ்டியால் மிகவும் கோபத்தோடு அங்கிருந்த தூணைக் குத்தினான். அப்பொழுது அந்த தூணிலிருந்து பயங்கரமான சப்தம் வெளிப்பட்டது.

**பாகவத கதை சாகரம் தொடரும்...**

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**பெரிய பெருமாள் வாழித்திருநாமம் :**

இதுவரை பொய்கையாழ்வார் தொடக்கமாக மதுரகவியாழ்வார் வரையிலான பன்னிரண்டு ஆழ்வார்களின் வாழித்திருநாமமும், அவற்றுக்கு அடியேன் பணித்த உரையும் அனுபவித்தோம்.

*"லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதா சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥ "*

என்று கூரத்தாழ்வான் அருளியபடியே ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் குருபரம்பரையானது திருமகளோடு கூடிய ஸ்ரீரங்கநாதன் தொடக்கமாக மணவாள மாமுனிகள் ஈறாக அவரவர்களுடைய ஆசார்யர்கள் வரை தினமும் அனுஸந்திப்பதாகும். அந்த ஸ்ரீரங்கநாதனே இக்ஷுவாகு முதல் இராமபிரான் வரையிலுள்ள இரவிகுல மன்னர் எல்லார்க்கும் குலதெய்வமாகி விளங்கினான். இவ்வாறு மனித உருவம் கொண்ட பெருமாளாகிய இராமபிரானால் வணங்கப்பெற்றமை பற்றி, ஸ்ரீரங்கநாதனுக்குப் பெரிய பெருமாள் என்ற திருநாமம் வந்தது என்பர். ஸ்ரீரங்க திவ்யதேசத்து மூலமூர்த்தியை பெரிய பெருமாள் என்றும், உற்சவ மூர்த்தியை நம்பெருமாள் என்றும் வழங்குவது ஸம்பிரதாயம். அந்த வகையில் அப்பெருமானுடைய வைபவம் பற்றி அப்பிள்ளை என்னும் ஆசார்யரும், மற்றுமுள்ள ஆசார்யர்களுக்கு அப்பிள்ளை முதலான ஆசார்யர்களும் அருளிய வாழித்திருநாமம் அமைந்துள்ளது. முதல் ஆசார்யரான பெரிய பெருமாள் வாழித்திருநாமமும் அதன் உரையும் இங்கு அநுபவிக்கப்படுகிறது.

*"திருமகளும் மண்களும் சிறக்கவந்தோன் வாழியே
செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்போன் வாழியே
இருவிசும்பில் வீற்றிருக்கும் இமையவர்கோன் வாழியே
இடர்கடியப் பாற்கடலை எய்தினான் வாழியே
அரிய தயரதன் மகனாய் அவதரித்தான் வாழியே
அந்தர்யாமித்துவமும் ஆயினான் வாழியே
பெருகிவரும் பொன்னி நடுப் பின் துயின்றான் வாழியே
பெரியபெருமாள் எங்கள் பிரான் அடிகள் வாழியே."*

**பதவுரை**

திருமகளும் – பெரிய பிராட்டியாரும், மண்களும் – பூமிப் பிராட்டியாரும், சிறக்க வந்தோன் – மேன்மை அடையும்படி வந்த நம்பெருமாள், வாழியே – வாழ வேண்டும்; செய்ய இடைத்தாய்மகளார் – செப்பமான – நேர்மையான இடையர் குலத்தில் பிறந்த ஸ்ரீகும்பன் மகளான நப்பின்னையால், சேவிப்போன் – சேவிக்கப் படுமவன்; இருவிசும்பில் – பெருமை பொருந்திய பரமபதத்தில், – வீற்றிருக்கும், இமையவர்கோன் – இமை கொட்டாதவர்களான நித்யசூரிகளுக்குத் தலைவனானவன்; இடர்கடிய – துன்பங்கள் அகல, பாற்கடலை – திருப்



பாற்கடலை, எய்தினான் – அடைந்தவன்; அரிய – அருமை யான, தயரதன் – தசரதன் என்னும் அரசன், மகனாய் – மகனான இராமனாய், அவதரித்தான் – அவதரித்தவன்; அந்தர்யாமித்வமும் ஆயினான் – எல்லார் மனத்திலும் உறையும் தன்மையும் உடைவனானவன்; பெருகி வரும் – வற்றாது ஆற்றொழுக்காகப்பொங்கி வரும், பொன்னி – பொன்னி என்னும் காவிரி ஆற்றின், நடுப்பின் – நடுவில், துயின்றான் – பள்ளிகொண்டவன்; பெரிய பெருமாள் – கோயிலில் உள்ள பெருமை மிக்க மூலமூர்த்தியான பெரிய பெருமாள், எங்கள் பிரான் – எங்களுக்கு உதவி செய்த பிரானானவன், அடிகள் – திருவடிகள் வாழி வாழியவே.

**சிறப்புரை :**

(திருமகளும் மண்மகளும் சிறக்க வந்தோன்) – திருவாகிய மகள் திருமகள். தேவர்களுக்கும் அசுரர் களுக்கும் நடந்த யுத்தத்தில் திருப்பாற்கடலை எம்பெருமான் கடைந்தான். கடைந்த போது தோன்றிய வள் தாமரைமலரில் வாழ்கின்ற பெரிய பிராட்டியாரான திருமகள். பாற்கடலைக் கடையும் எம்பெருமானுக்கு சிரமம் நீங்குவதற்காக, புன்சிரிப்பு, கருணை இவைகளா கிற அமுதங்களாலே நனைத்துக்கொண்டு சந்திரனுடைய நிலவு போலே சுழன்று வருகின்ற அமுத அலைச் சுழல்களிலிருந்து பிராட்டி தோன்றினாள் என்று கூறும் ஸ்ரீகுணரத்னகோசம் (49). அரங்கனுக்கு திருமகளும் மண்மகளும் பத்னிகள் என்று புருஷஸூக்தம் (2–5) கூறும். திருமகளுக்கும் மண் மகளுக்கும் சிறப்பாவது – நம்மாழ்வார் *''என் திருமகள் சேர் மார்பன்''* என்றும், *''நின் திருவெயிற்றால் இடந்து நீ கொண்ட நிலமகள் கேள்வன்''* என்றும் அருளியது காண்க. இதுதன்னையே திருமழிசை யாழ்வாரும் *''மன்னு மாமலர்க்கிழத்தி வையமங்கை மைந்தனாய்''* என்று திருச்சந்த விருத்தத்தில் (55) அருளியபடியே சிறந்த தாமரைப்பூவில் பிறந்த பிராட்டிக் கும் மண்மகளுக்கும் வல்லபனானவன் அரங்கன் என்று அருளுவர். நம்பெருமாளுக்கு வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் விளையாடவல்ல அன்ன பேடை போன் றுள்ள திருமகளும், மேன்மேலும் வளர்த்தியை உடைய தான நிழல் போன்றவளான மண்களும் திகழ்வதை பட்டர் ஸ்ரீரங்கராஜ பூர்வ சதகத்தில் (63) அருளியதும், *''கமலயா க்ஷமயா ச ஸிம்ஹாஸநே நிஷண்ணம்''* (66) என்கிறபடியே திருமகளோடும் நிலமகளோடும் சிங்காசனத்தில் அரங்கனை எப்போதும் விட்டுபிரியாது வீற்றிருப்பதை அருளியதும் அநுபவிக்கத் தக்கவை. திருமகளுக்கு சிறப்பாவது – திருவாகிய பெரிய பிராட்டியாரை திவ்ய மஹிஷியாக பெரிய பெருமாள் கொண்டமை. இது பற்றியே பெரியாழ்வார் "திருவாளன்" என்கிறார். மேலும், ஏழு உலகங்களையும் படைத்தவுடன் தளிர் விடுவதாக வும், அவற்றின் நிர்வாகத்தினால் மொட்டு விடுவதுமாகிற கடைக்கண் பார்வை உடையவளும், திருவரங்க மாளி கைக்கு ஒரு மங்கள தீபக்கொழுந்து போலிருப்பவ ளுமான ஸ்ரீரங்கராஜனுடைய திவ்ய மஹிஷீயுமானவள் என்று பட்டர் ஸ்ரீகுணரத்னகோசத்தில் உரைப்பர். அரங்கனுடைய கருணைக்கோர் இருப்பிடமானவளாய், ஞானம், சக்தி முதலான ஆறு குணங்கள் நிரம்பப்பெற்ற வளாய், மேலான பிரிகிருதியாகச் சொல்லப்படுமவ ளான திருமகள் எம்பெருமானுடைய மேலான ஒரு சக்தியாவாள் என்று ஸநத்குமார ஸம்ஹிதை கூறும்.

திருமங்கையாழ்வாரும் *''ஒலிதிரை நீர்ப்பௌவம் கொண்ட திருவாளன்''* என்பதற்குச்சேர ஒலிக்கின்ற அலைகளோடு கூடிய ஜலத்தையுடைய கடலிலே பிறப்பையுடையவளான பெரிய பிராட்டியாரான திருவுக்கு வல்லபனானவன் என்கிறார். எல்லாவற்றா லும் உயர்ந்தவனாய் பரமபுருஷனான எம்பெருமான், மங்களத்தை உண்டு பண்ணுபவளான இவளுக்கு அநுரூபமான பதி ஆவான். "உனக்கு ஏற்கும்" என்று ஆழ்வார் அருளியபடியே இவள் அவனுக்கு ஒப்பாய் இருக்குமாபோலே எம்பெருமானும் திருத்தக்கச் செல்வ னாய் இருப்பவன் என்பர்.

பிராட்டியின் வால்லப்யத்தாலே அவன் திருமகள் கேள்வனானான். ச்ரிய:பதி என்பர். இங்ஙனே பல உள. விரிப்பில் பெருகும். மண்மகளுக்கு சிறப்பாவது – திருமதிள்கள், திருமண்டபங்கள், இடைகழி முதலான தன் பரிவாரங்களோடு கூடிய ஸ்ரீரங்கவிமானத்தை சேவிப்பதற்காகப் பூமிப்பிராட்டி இங்கு வந்து சேர்ந்ததுபோல இருக்கிறது என்று பட்டர் ஸ்ரீரங்கராஜ பூர்வ சதகத்தில் (35) அநுபவிப்பர். பிரளயம் கொண்ட காலத்திலே பாசி பற்றிக்கிடந்த மண்மகளை உத்தரிப்பதற்காக வராக அவதாரம் செய்து, அதனால் வந்த ஒளியுடையவனாய் திருவரங்கத்தில் பள்ளி கொண்டான் என்பதற்குச்சேர ஆண்டாள் *''பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்கு... திருவரங்கச் செல்வனார்''* (நாச்.திரு. 11–8) என்று அருளியது காண்க. இதனால் மண்மகள் சிறப்பு சொல்லப்பட்டதாயிற்று.

வாழித்திருநாமம் வளரும்...



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா

**வாசகர்களுக்கு சில அறிவுரைகள் :**

1) ஒவ்வொரு பாடத்திலுள்ள சொற்களையும் மனப்பாடம் செய்தல் வேண்டும்.

2) படித்த பாடங்களை தினமும் ஐந்து (அ) ஆறுமுறை பயிற்சி செய்தல் வேண்டும்.

3) ஒவ்வொரு பாடத்திற்கு கீழும் சமஸ்கிருதத்தில் அளிக்கப்பட்ட வாக்கியத்தை தமிழிலும், தமிழில் அளிக்கப்பட்ட வாக்கியத்தை சமஸ்கிருதத்திலும் சரியாக மாற்றி கூறுதல் வேண்டும்.

4) குடும்பத்திலுள்ளோரிடமும் முடிந்தவரை சமஸ்கிருதத்திலேயே உரையாடுங்கள்.

5) சிறு சிறு வார்த்தைகளை, கதைகளை கூறியும், எழுதியும் பயிற்சி செய்தல் வேண்டும்.

6) நடைமுறையில் உள்ள சொற்களை அவ்வபொழுது பயிற்சி செய்து கொண்டு வருதல் வேண்டும்.

## १.प्रथमः पाठः (பாடம்-1)

| | | |
|---|---|---|
| सः = அவன் | कुत्र = எங்கு | अस्ति = இருக்கின்றான் |
| त्वं = நீ | तत्र = அங்கு | असि = இருக்கின்றாய் |
| अहं = நான் | अत्र = இங்கு | अस्मि = இருக்கின்றேன் |

१. सः अस्ति २. अहं तत्र अस्मि ३. त्वं कुत्र असि? ४. सः तत्र अस्ति ५.अहं अत्र अस्मि ६.त्वं तत्र असि ७. सः कुत्र अस्ति? ८. सः तत्र अस्ति ९. त्वं तत्र असि १०. अहं कुत्र अस्मि?

1) நீ எங்கு இருக்கின்றாய்?, 2) நான் இங்கு இருக்கின்றேன், 3) அவன் அங்கு இருக்கின்றான், 4) நீ இங்கு இருக்கின்றாய், 5) நான் எங்கு இருக்கின்றேன்? 6) நீ இருக்கின்றாய், 7) நான் இருக்கின்றேன், 8) அவன் இருக்கின்றான், 9) நான் அங்கு இருக்கின்றேன்?, 10) நீ அங்கு இருக்கின்றாய்?

**விடைகள் :**

1) அவன் இருக்கின்றான், 2) நான் அங்கு இருக்கின்றேன், 3) நீ எங்கு இருக்கின்றாய்? 4) அவன் அங்கு இருக்கின்றான், 5) நான் இங்கு இருக்கின்றேன், 6) நீ அங்கு இருக்கின்றாய் 7) அவன் எங்கு இருக்கின்றான்? 8) அவன் அங்கு இருக்கின்றான், 9) நீ அங்கு இருக்கின்றாய் 10) நான் எங்கு இருக்கின்றேன்?

१.त्वं कुत्र असि? २. अहं अत्र अस्मि ३. सः तत्र अस्ति ४.त्वं अत्र असि ५.अहं कुत्र अस्मि? ६. त्वं असि ७. अहं अस्मि ८. सः अस्ति ९.अहं तत्र अस्मि १०. त्वं तत्र असि।



பகவத் கீதை-இளைய சமுதாயம்

# நரகத்திற்கான மூன்று நுழைவு வாயில்கள்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ், 6304428489

சொர்க்கம், நரகம் பற்றி அனைவருமே அறிந்திருப்போம். சொர்க்கத்திற்குச் செல்வோர் ஆனந்த மாகவும், நரகத்திற்குச் செல்வோர் துன்பமுடனும் இருப்பர் என்பதையும் அறிந்திருப்போம், புண்ணியம் செய்தால் சொர்க்கத்திற்கும், பாவம் செய்தால் நரகத் திற்கும் செல்வர் என்பதும் கூட மானிடர்களுக்குத் தெரி யும். எனினும், மனிதன் பாவங்களை செய்து கொண்டே உள்ளான். உண்மையில் நரகலோகத்தின் தண்டனைகள் குறித்து முழுமையான விவரங்கள் நமக்கு ஸ்ரீமத்பாக வதத்தின் வாயிலாகக் கிடைக்கின்றது. எந்த பாவத்திற்கு என்ன தண்டனை என்பதனை விரிவாகக் கூறுகின்றது. பாகவதம் ஸ்தூலமான பாவங்களுக்கான தண்ட னையை குறித்து குறிப்பிட, பகவத்கீதை சூக்ஷ்மமான பாவங்களுக்கு நரகம் எப்படி கிடைக்கின்றது என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றது. இதனை இளைஞர்கள் தெளிவாக அறிந்து கொள்ளல் வேண்டும். எப்பொ ழுதுமே பாவங்களையே செய்பவர்களுக்கு இது சாதார ணமானதாகின்றது. அதுபோன்றே நரகத்திற்கு காரண மான செயல்களை செய்பவர்களுக்கும், அதேபோன்று நரக குணம் கொண்டவர்களுக்கும் இவை சாதாரணமா னதாகத் தோன்றும், இது போன்றவற்றினால் நரகம் கிடைக்கும் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை.

நரகத்திற்கு மூன்று பாதைகள் இவ்வுலகிலேயே உள்ளன என ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத்கீதையில் கூறியுள்ளார். "காமம், கோபம், பேராசை ஆகிய இம்மூன்று வகையான நரகத்தின் நுழைவு வாயில்கள் ஆத்மாவை நாசம் செய்யக் கூடியவை. அதாவது, கிழிந்த நிலையில் தள்ளக் கூடியவை. ஆகவே, இம்மூன்றையும் விட்டுவிட வேண்டும்" (பகவத்கீதை *16-21*). சாக்ஷாத் எம்பெருமான் மானிடர்களின் நன்மைக்காகவும், நல்வாழ்விற்காகவும் மிகமுக்கியமான எச்சரிக்கையை செய்கின்றார். காமம், கோபம், பேராசை இம்மூன்றும்



சாதாரண குணநலன்களாகக் காணப் பட்டாலும், உண்மையில் இவை நரகத்திற் கான நுழைவு வாயில்களாகும். அதாவது, இவற்றை கடைபிடிப்பவர்கள் நுழைவது நரகத்தில் தான். நரகம் என்பது ஒன்றே எனினும் அதனுள் செல்வதற்கு மூன்று நுழைவுவாயில்கள் உள்ளன. ஒரு நுழைவு வாயிலின் வழியாக நரகத்திற்குச் செல் வதே கொடுமையெனில், இனி மூன்று நுழைவு வாயிலின் மூலமாகச் செல்பவ னுக்கு கொடுமையான நிலை எவ்வாறு இருக்கும் என்பதை ஊகித்தல் வேண்டும்.

காமல் என்றால் பொதுவாக காமத் தில் வீழ்வது என பொருள் கூறப்பட்டா லும், அதை விவரிக்க இயல முடியாத ஆசை என்றும் பொருள் கூறலாம். இன் றைய காலகட்டத்தில் இளைஞர்கள் வீழ்ந்து கிடப்பது இக்காமத்தில்தான். இது தற்பொழுது வாழ்க்கையை அழிப்பது மட்டுமின்றி, நரகத்திற்கும் வழிகோலு கிறது. காமத்திற்கு அடிமையான இளை ஞன் தன் எதிர் காலத்தை ஆபத்தில் வைக் கின்றான் என்று பொருள் கொள்ளல் வேண்டும். எனவே தான் பெரியோர், ஆசிரியர்கள் முக்கிய பங்கு கொண்டு இந்த அடிமையிலிருந்து இளைஞர்களை காத்தல் வேண்டும். நரகலோகத்தில் அவர் கள் நுழையாதபடி தடுத்தல் வேண்டும். துணையில்லா காரணத்தாலேயே, அவர் கள் அவ்விதமாக, காமத்திற்கு அடிமையா கின்றனர் என ஆய்வுகளில் கூறப்படு கிறது.

இனி, கோபம் இரண்டாவது நுழைவு வாயிலாகக் கூறப்படுகிறது. தவிர்க்க இயலாத காமத்தினால் தான் கோபம் உண்டாகிறது. யாரொருவர் தன் காமத் திற்கு தடையாக இருக்கின்றார்களோ அவர்கள் மீது கோபம் உண்டாகிறது. கோபத்தினால் சண்டை, கவலைகள் மேலும் தீவிரமானால் கொலைகளும் நடந்தேறுகின்றன. இதுபோன்ற நிகழ்வு கள் வாழ்க்கையை நரகமாக மாற்றுகின்றன. கோபத்தினால் உடலில் பலவிதமான நோய்களும் உண்டாகின்றன. எனவேதான், மனிதன் தனக்கு கோபம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

எப்படியும், ஒவ்வொரு முறையும் கோபம் வந்துகொண்டே இருக்கும், இவை நாமே ஏற்படுத்திக் கொண்ட கோபமேயன்றி தானாக வந்த கோபம் அல்ல.

நரகத்திற்கான மூன்றாவது நுழைவு வாயில் பேராசையாகும். பேராசை என்பது அனைத்தும் தனக்கே கிடைத்தல் வேண்டும், அது யாருக்கும் கிடைத்தல் கூடாது என எண்ணுதலாகும். பேராசையினால் தான் அன்பு, நட்பு, சாங்கிய ஜீவனம், உறவுகள் எல்லாம் தொலைந்து விடுகின்றன.

எனவே, இளைஞர்கள் இவற்றில் கவனமாக இருந்து கீதோப தேசத்தினை விழிப்புடன் கவனித்தல் வேண்டும். காமத்திற்கும், கோபத் திற்கும், பேராசைக்கும் தூரமாக இருந்து, தற்போதைய வாழ்க்கையை இன்னல்கள் இன்றி, இன்பமுடன் வாழ்வதோடு மட்டுமின்றி நரகத்திற் கான நுழைவு வாயில்களில் நுழைவதற்கான தேவையின்றி பார்த்துக் கொள்ள வேண்டும். இதனால் வருங்கால பிறவிகளும் இன்பமானதாக அமையும்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 50க்கான பதில்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ச் | சி | ற் | றா | று | கு | ட | 2 கு | | 3 தி |
| | 4 ந | ல் | ல | கா | ட் | சி | 5 கா | | | | ரு |
| | 6 வி | ஸ் | வ | ரூ | ப | ம் | ர் | னூ | த | 7 ஆ | க் |
| | | 8 க | ன் | ண | ஷ் | ரு | கி | க் | ய | 9 மா | க |
| து | 10 இ | ரு | வ | டு | ட் | 11 எ | | 12 கு | | ம் | டி |
| த் | ர | பா | 13 சி | ம் | மா | ச் | ச | ல | ம் | ன | த் |
| ல | ண் | ழ் | | க | லி | லா | 14 கா | சே | ன் | த | தா |
| ங் | ய | வா | | ங் | ப | ஜ | ம | க | ர | ந் | ன |
| ர | க | ர் | கை | ர | கா | ர் | தே | ரா | க் | ச | ம் |
| வ | சி | | ங் | 15 ஸ்ரீ | 16 ம | 17 நி | னு | ழ் | 18 சு | ரி | |
| ரு | 19 பு | ஷ் | 20 க | ர | ம் | | சை | வா | மா | 21 அ | |
| 22 தி | ரு | வ | ல் | லி | க் | கே | ணி | ர் | | தி | 23 தி |

தொடர்

# சீந்தில் கொடி



ஆயுர் வேதம்




தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
முனைவர் ப. தனஞ்செழியன், 9003500499


நம் நாட்டில் ஆண்டு முழுவதும் வளரும் இந்த சீந்தில் கொடி இதயவடிவில் காணப்படும். சுவாச பிரச்சனைகளைத் தீர்க்கவும், மேலும் அமுத குணங்கள் நிறைந்தும் இருப்பதினால் இதனை அமிர்த்தவல்லி என்றும், இலைகளில் தேன் போன்ற திரவம் இருப்பதினால் மதுவர்ணி என்றும், கொடி அறுந்த இடத்திலிருந்தே மீண்டும் துளிர்விடும் அதிசயக்கொடி என்றும், பல்வேறு காய்ச்சல்களைப் போக்கும் குணத்தினால் சமஸ்கிருதத்தில் ஜ்வரக்ந என்று இக்கொடி அழைக்கப்படுகின்றது. மினிஸ்பார்மேசி என்னும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்த இக்கொடி அறிவியல் பெயர் டிநோஸ்போரா கார்டிபோலியா.

**தோல் நோய்களுக்கு :**

சீந்தில் கொடிப் பொடி, வேப்ப இலைப்பொடி ஒவ்வொன்றும் 50 கிராம் எனக் கலந்து, நாள்தோறும் ஒன்று அல்லது இரண்டு முறை வேளைக்கு 200 மி.லி. தண்ணீரில் 2–3 கிராம் பொடியைக் கலந்து, 100 மி.லி. ஆகும் வரை காய்ச்சி, இறக்கி, வடிக்கட்டி ஒரு தேக்கரண்டி தேன் கலந்து, உண்டு வந்தால் இரத்தம் சுத்தமாகி சொறி, சிரங்கு, படர் தாமரை, அரிப்பு, சொரியாசிஸ் முதலான தோல் நோய்கள் குணமாகும். இரத்தமும் சுத்திகரிக்கப்படும்.

இதனிலையின் சாறு, நல்லெண்ணெய் இரண்டும் சமமாகக் கலந்து மிதமான சூட்டில் இறக்கி, வடிகட்டி, பாதிக்கப்பட்ட தோல் பகுதியில் பூசி வந்தால் தோலின் மீது அந்த சுவடுகள் இல்லாமல் மறையும்.

**வெவ்வேறு வகையான காய்ச்சல் குணமாவதற்கு :**

நாள்தோறும் இரண்டு வேளை, வேளைக்கு 20 மி.லி சீந்தில் கொடி சாற்றில் ஒரு தேக்கரண்டி தேன் அல்லது வெல்லம் கலந்து உண்டுவந்தால் மலேரியா, டைப்பாய்ட், விஷ ஜுரம் மற்றும் கண்டறிய முடியாத காய்ச்சலும் குணமாகும்.

**அதிகமான எடையைக் குறைப்பதற்கு :**

சீந்தில் கொடியின் பொடி, திரிபல சூர்ணம் ஒவ்வொன்றும் 100 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும், ஒரு நாளைக்கு இரண்டு முறை வேளைக்கு 200 மி.லி. நீரில் அரை தேக்கரண்டியிலிருந்து ஒரு தேக்கரண்டி அளவு பொடியை 100 மி.லி.ஆகும்வரை மிதமான தீயில் சுண்டவைத்து பிறகு இறக்கி லேசான சூட்டில் வடிகட்டவும். பின்பு ஒரு தேக்கரண்டி தேன் கலந்து உணவு சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக உண்டு வந்தால் நல்ல பலன் கிட்டும்.

**மூட்டு வலிக்கு :**

சீந்தில் கொடி, கடுக்காய், துங்கமுஸ்தல சூரணம் ஒவ்வொன்றும் 50 கிராம் வீதம். கலந்து

வைத்துக்கொண்டு, காலை, மாலை வேளைக்கு 2–3 கிராம் பொடியை தேவையான அளவு தேனுடன் கலந்து உண்டு வந்தால் பருமன் குறைவதோடு அதிக பருமனால் ஏற்படும் முடக்க நோய்கள் குணமாகும்.

**காயம், புண், ரணம் :**

சீந்தில் கொடி இலையோடு தேன் கலந்து மென்மையாக அரைத்துக்கொண்டு நாள்தோறும் இரண்டு முறை காயம், புண் மற்றும் ரணங்கள் மீது பூசினால் நாள்பட்ட இவை குணமாகும்.

**காமாலை :**

தினமும் இரண்டு முறை வேளைக்கு ஒரு சிறு உருண்டை குவளை மோரில் உப்பின்றி பருகி வந்தால் காமாலை விரைவாகக் குணமாகும்.

**உடலில் சூடு தனிவதற்கு :**

சீந்தில் கொடி, வெல்லம் ஒவ்வொன்றும் 25 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு இரண்டு வேளை, வேளைக்கு ஒரு கிராம் பொடியை தகுந்த வெண்ணெய்யோடு கலந்து உண்ண வேண்டும். அவ்விதமாக உண்டு வந்தால் அதிகமான சூடு குறைந்து வயிற்றில் ஏற்படும் எரிச்சல், கைகால்களில் ஏற்படும் எரிச்சல் முதலானவையும் குறையும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

**ஆயுர்வேதம் வளரும்...**


## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

***யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?***

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

***பெரியோர்கள் செய்ய வேண்டியன...***

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

***நிபந்தனைகள் :***

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



**குழந்தைகளே எழுதுங்கள்! கோவிந்தன் திருவருளை பெறுங்கள்!!**



# 2020

# அக்டோபர் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | (யுரேனஸ்)<br>(செவ்வாய்) | ராகு | |
| (நெப்ட்யூன்) | அக்டோபர் - 2020 | | |
| சனி | | | சுக்ரன் |
| (ப்ளூட்டோ)<br>குரு | கேது | | சூரியன்<br>புதன் |

**அக்டோபர் - 2020**

04 – செவ்வாய்(வ) –மீனம்
04 – ப்ளூட்டோ –வ.நி
14 – புதன் –வ.ஆ.
17 – சூரியன் –துலாம்
23 – சுக்ரன் –கன்னி
30 – ப்ளூட்டோ –மகரம்

**மேஷம்**

ராசிநாதன் வக்ரமடைந்து விரய ஸ்தானத்திற்குச் செல்கிறார். வியாழன் ராசியை நோக்குவது சிறப்பு. சென்ற மாதம் நடைபெறாத சில வேலைகள் இம்மாதத்தில் நடைபெறத் தொடங்கினாலும் இடையிடையே இடையூறுகள் வரும். பொருள் வரவு திருப்தி தரும். எனினும் செலவினங்கள் மீது விழிப்புடன் இருத்தல் அவசியம்.

**ரிஷபம்**

ராசியில் ராகுவும், 7–ல் கேதுவும் உலவிடுவது சிலாக்கியமில்லை. சுக்ரன், புதன் சிறப்பாகச் சஞ்சரிப்பதால் பொருள்வரவிற்குக் குறைவு வராது. நாவன்மை சிறக்கும். சட்டவல்லுநர்கள், மேடைப்பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோருக்கு வரவேற்பு கூடும்.

**மிதுனம்**

ராசி நாதன் புதன் ஐந்திற்குரிய சுக்ரனுடன் நான்கில் உலவுவது மிகவும் சிறப்பாகும். மாதப்பிற்பாதியில் ராசிநாதன் புதன் வக்ரம்பெறுவதால் மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. சுக்ரன் நீசபங்கம் பெற்று 4–ல் உலவுவதால் தங்கம், வெள்ளி விலையுயர்ந்த பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்**

குரு 6–ல் தன் சுய வீட்டில் சஞ்சரிப்பதால் கடன் மற்றும் எதிரிகளின் தொல்லைகள் இராது. உடல் நலம் சீராகும். மாதப்பிற்பாதியில் புதனின் வக்ர சஞ்சாரத்தால் உடன் பிறப்புகள் திசை மாறிச்செல்லலாம். சிலநாட்கள் கழித்து மனம் மாறி மீண்டும் திரும்பி வந்து குடும்பத்துடன் இணைவர்.

**சிம்மம்**

ராசி நாதன் சூரியன் தன–லாபாதிபதியான புதனுடன் 2–ல் சஞ்சரிக்கும் இக்காலத்தில் பெரும்பொருள் வரவை எதிர்ப்பார்க்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். செவ்வாய் வக்ரமாக 8–ல் உலவுவதால் பெற்றோரின் உடல் நலனில் அக்கறை தேவை. 5–ல் குரு உலவுவதால் பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி**

ராசியில் சுக்ரனும் புதனும் உலவுவதால் மன உற்சாகம் பெருகும். கலைஞர்களுக்கு வரவேற்பு கூடும். புதிய ஒப்பந்தங்கள் தேடிவரும். பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு வருவார்கள். 3–ல் கேதுவும், 9–ல் ராகுவும் சஞ்சரிப்பதால் உடன் பிறப்புகள் மற்றும் தந்தை ஆகியோரது உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்**

ராசி நாயகன் விரயஸ்தானத்திலும் 2–ல் கேது, 8–ல் ராகு சஞ்சரிப்பது சிலாக்கியமில்லை. குடும்பத்தில் பிரச்சனைகள் எழாதிருக்க அனுசரித்து செல்லவேண்டியது அவசியம். பாக்கிகள் வசூலிப்பதில் சிரமம் ஏற்படும். சனி 4–ல் வலிமையாக உள்ளதால் வீடு, வாகனம், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**

ராசி நாதன் செவ்வாய் வக்ரம்பெறுகிறார். மருத்துவர்களின் ஆலோசனைகளைக் கடைபிடிப்பதில் அலட்சியம் கூடாது. ராசியில் கேதுவும், 7–ல் ராகுவும் உள்ளதால் வாழ்க்கைத் துணைவருடனும், தொழில் பங்குதாரர்களுடனும் அனுசரித்துச் செல்லவும். சூரியன் மற்றும் புதனின் சஞ்சாரத்தால் தொழில்–வியாபாரம் சிறக்கும்.

**தனுசு**

இம்மாதம் குரு, சூரியன் நிலை நன்றாக உள்ளது. உடல் நலம் சீராகும். தாய்வழி உறவினர்களின் மூலம் புதிய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வீர்கள். 12–ல் கேது உள்ளதால் அடிக்கடி சிறு சிறு தொல்லைகள் வரத்தான் செய்யும். 6,11க்கு அதிபதியான சுக்ரன் 10–ல் சஞ்சரிப்பதால் உத்தியோகத்தில் எதிர்ப்பார்த்த உயர்வு கிட்டும்.

**மகரம்**

ராசியில் சனியும், 9–ல் புதன், சுக்ரன் ஆகியோர் சஞ்சரிப்பது மிகவும் சிறப்பாகும். 9 மற்றும் 10க்குரியவர்கள் பாக்கியஸ்தானத்தில் ஒன்று கூடுவதால் வசதிவாய்ப்புகள் அதிகரிக்கும். செல்வச் செழிப்பு கூடும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பின் புதிய பதவியும் பிள்ளைகள் வழியிலும் உதிரி வருமானங்கள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**கும்பம்**

தன–லாபஸ்தானாதிபதி வலிமையாக வீற்றுள்ளார். பொருளாதார வளர்ச்சி பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள் நடக்கும். கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் நீடிக்கும். பிரச்சனைகள் முழுமையாக விலகும். நீண்ட நாளைய எண்ணங்கள் இப்போது நிறைவேறும். மனதில் துணிவு பிறக்கும்.

**மீனம்**

ராசி நாதன் 10–ல் தன்சுய வீட்டில் சிறப்பாக வீற்றுள்ளார். வேலை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு தக்க உத்தியோகம் கிடைக்கும். தொழில்முனைவோர் மற்றும் வியாபாரிகளுக்கு எதிர்ப்பார்த்ததைவிட அதிகமாக லாபம் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புடன் செய்யும் வர்த்தகமும் பெருகும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் & பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை
(எம்.ஓ.கூபன் (எண்) : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை
(டி.டி. எண்.) : தேதி:

இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்*
*பணிபுரியும் எப்பொழுது*
*வேண்டுமானாலும்*
*நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.


*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Prof. K.Rajagopalan****, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by* ***Sri. P. Ramaraju,*** *M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*

**திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர
பிரம்மோத்ஸவத்தின்
போது ஆலயத்திற்குள்
நடைபெற்ற வெவ்வேறு
வாகன சேவைகளின் திருக்காட்சிகள்**













SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-09-2020.
Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

17-10-2020
சனிக்கிழமை
இரவு :
ஹம்ச வாகனம்

